Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 149 | ஞாயிற்றுக்கிழமை 24 ஏப்ரல் 2022 | சித்திரை 11 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 50/=




ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவரின் இறுதிக்கிரியைகள் நேற்று இடம்பெற்ற நிலையில், கொழும்பிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அலரிமாளிகை முன்பாக நேற்று எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ஒ-இ)

## மேலும் இருவருக்கு இராஜாங்க அமைச்சு

கொழும்பு, ஏப். 24

ஜனாதிபதி கோத்தாபயவால் மேலும் இருவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. லொஹான் 16

## வான் பாய்கிறது பிரமந்தனாறு குளம்!

மக்களுக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, ஏப். 24

கனமழை காரணமாக பிரமந்தனாறு குளம் 1 அடி 6 அங்குலம் வான் பாய்ந்து கொண்டிருக்கின்றது. எனவே குளத்தின் 16

# இடைக்கால அரசுக்கும் நானேதான் பிரதமர்!

- பதவி விலகுமாறு என்னை யாரும் கோரவில்லை
- கதவு திறந்தேயுள்ளது; போராட்டக்காரர்கள் பேச்சுக்கு வரலாம்
- நான் நலமாகவே உள்ளேன்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ச அடம்பிடிப்பு முற்றுகின்றது அரசியல் நெருக்கடி

கொழும்பு, ஏப்ரல் 24

அரசியல் வரலாறு தெரியாத ஒரு சிலர், என்னைப் பதவி விலகுமாறு வலியுறுத்தலாம். இது தொடர்பில் என்னிடம் எவரும் கோரிக்கை விடுக்கவில்லை. இடைக்கால அரசு அமைந்தால்கூட அதுவும் எனது தலைமையிலேயே மலரும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச திட்டவட்டமாக நேற்று அறிவித்துள்ளார். 15

## யாழ். நகரில் இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்., ஏப். 24

யாழ்ப்பாணம்-ஸ்ரான்லி வீதிப் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது. 15

## பல்கலை மாணவி சடலமாக மீட்பு

யாழ்., ஏப். 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவி 15

## பவுஸருக்கு தீவைப்பு: சந்தேகநபர் கைதாகி பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஏப். 24

ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எரிபொருள் பவுஸருக்கு தீ மூட்டியதாக சந்தேகிக்கப்படும் நபர் குற்றப் புலனாய்வு 16

## அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், ஏப். 24

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்ட ஜூலி ஜே சாங் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு இரு நாள் பயணமாக இன்றையதினம் வருகை தரவுள்ளார். இந்தப் 15

## தூதுவர்களுடன் சுயாதீன அணி பேச்சு

கொழும்பு, ஏப். 24

பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகி இடைக்கால அரசாங்கத்தை அமைக்காவிட்டால், சுயாதீன நாடாளு 15

## போராட்டத்துக்கு தடையா? மறுதலித்தது நீதிமன்றம்!

### பொலிஸ் நடவடிக்கை பிசுபிசுப்பு

கொழும்பு, ஏப். 24

ஜனாதிபதி கோத்தாபய உள்ளிட்ட அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளோர் வன்முறையில் ஈடுபடுவதைத் தடுக்கும் வகையில் உத்தரவிடுமாறு பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கொழும்பு மேலதிக நீதிவான் எம்.ஏ.பிரபாகரன் நேற்று நிராகரித்தார்.

நூற்றுக்கணக்கானவர்கள் சில நாள்களாக காலிமுகத்திடலில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால், பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், பொதுச்சொத்துக்களுக்கு 15

## யாழ். போதனாவிலும் மருந்து தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் அத்தியாவசிய மருந்துகள் உள்ளிட்டவைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக 15

## கோத்தாவை பழிவாங்க இது தக்க தருணமல்ல!

### நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

ஜனாதிபதி கோத்தாபயவுடன் பிரச்சினைகள் இருக்கலாம், கோபங்கள் இருக்கலாம். அதற்காக அவர் தலைமையிலான அரசைக் கூண்டோடு கவிழ்க்க 15

# மருந்து தட்டுப்பாடு விரைவில் நீங்கும்!!!

### இந்தியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, உலக வங்கி, ஏ.டி.பி., உலக சுகாதார நிறுவனம் கைகொடுக்கின்றன

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு விரைவில் நீங்கும் என்று சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இந்திய அரசால் நன்கொடையாக வழங்கப்படவுள்ள 101 வகையான மருந்துகளும் அறுவை சிகிச்சை உபகரணங்களும் எதிர்வரும் புதன்கிழமை நாட்டை வந்தடையவுள்ளன. 15

## குடிதண்ணீர் உச்சி மாநாட்டிலும் நிதி உதவி கோரிய கோத்தா

கொழும்பு, ஏப். 24

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முதலீடு, தொழில்நுட்ப பரிமாற்றம், நிதி, விரிவான அபிவிருத்தி உதவிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு உதவி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி கோத்தாபய பதவி விலகவேண்டும்!

## வலுக்கின்றது எதிர்ப்பு

**கொழும்பு, ஏப்.24**

**மக்களின் கோரிக்கைகளை ஏற்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலகவேண்டும் என தேசத்துக்கான சுயாதீன வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

அவர்கள் முன்மொழிவுகளுடன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதி பதவி விலகவேண்டும்.

இடைக்கால தேசிய அரசாங்கத்தை உடனடியாக அமைக்கவேண்டும்.

அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சம எண்ணிக்கையிலான பிரதி அமைச்சர்களுடன் 18 அத்தியாவசியத் துறைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட புதிய பிரதமர் மற்றும் அமைச்சரவையும் உருவாக்க வேண்டும்.

இடைக்கால தேசிய அரசாங்கத்தின் காலத்தில் முன்னுரிமை என்ற வகையில், அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்வதற்கும், 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் விதிகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான திருத்தங்களுடன் ஜனநாயக ஆட்சி முறைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்டவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்ய அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்- என்றுள்ளது. (எ-இ)

# 1953 ஹர்த்தாலுக்கு அப்பால் சென்ற மக்கள் போராட்டம்!

*வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு*

கொழும்பு, ஏப்.24



நாடு முழுவதும் தற்போது நடந்துவரும் மக்களின் எதிர்ப்புப் போராட்டங்களானவை, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற ஹர்த்தாலுக்கும் அப்பால் சென்ற போராட்டமாக மாறியுள்ளது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

1953ஆம் ஆண்டு நடைபெற்ற ஹர்த்தாலின் போது பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் சுமார் 11 பேர் கொல்லப்பட்டனர். தற்போது நடைபெறும் போராட்டங்கள் அந்தளவுக்கு மோசமடையவில்லை. ஆனால், மக்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருவதில், 1953 ஆம் ஆண்டு ஹர்த்தாலுக்கும் அப்பால் சென்றுள்ள தன்மையை அவதானிக்க முடிகின்றது.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அரசாங்கத்துக்கு எதிராக நாடு முழுவதும் இந்தப் போராட்டங்கள் நடந்து வருகின்றன. போராட்டத்தில் வன்முறையான நிலைமைகள் குறைந்து காணப்படுவது நல்ல முன்னேற்றம். மோதல் நிலைமைகள் இன்றி, இப்படியான போராட்டம் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ளமையை விரும்புகின்றேன் - என்றார்.

இலங்கையில் 1953ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12 ஆம் திகதி நாடுதழுவிய ரீதியில் ஒத்துழையாமை மற்றும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடைபெற்றது. அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்துக்கு எதிராக இந்த ஹர்த்தால் நடத்தப்பட்டது. லங்கா சமசமாஜக் கட்சி மற்றும் இடதுசாரிகள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிராக நாடு தழுவிய ரீதியிலான இந்தப் போராட்டத்தை நடத்தி இருந்தன. ஒருநாள் மாத்திரமே நடைபெற்ற அரசாங்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் 11 பேர் வரை கொல்லப்பட்டனர். இந்தப் போராட்டத்தின் விளைவாக அன்றைய பிரதமர் டட்லி சேனாநாயக்க தனது பதவியிலிருந்து விலகியிருந்தார். (எ-இ)




# நாணய நிதியம் முன்பும் “கோத்தா ஹோ ஹோம்”

கொழும்பு, ஏப்.24

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அலுவலகத்துக்கு முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தையும், ஜனாதிபதியையும் வீடு செல்ல வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் அமைந்துள்ள சர்வதேச நாணய நிதிய அலுவலகத்துக்கு எதிரில் இந்தப் போராட்டத்தை புலம்பெயர் இலங்கையர்கள் முன்னெடுத்தனர்.

அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் வகையில் பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ-இ)




# அரசை பதவி விலகக்கோரி யாழ். நகரில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 24

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைக் கண்டித்து அரசைப் பதவிவிலகுமாறு கோரி தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையால் யாழ். நகரப் பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் மற்றும் யாழ். மத்திய பேருந்து நிலையப் பகுதிகளில் "தடுமாறும் அரசே பதவி விலகு", "மக்கள் வயிற்றில் அடிக்காதே" போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ம-14.20)



ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் உடன் பதவிவிலகவேண்டும் என்று வலியுறுத்தி எம்பிலிப்பிட்டிய நகரில் ஐக்கிய மக்கள் சக்தியால் நேற்று மிகப்பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம)

# பொருளாதாரப் பயணப்பாதை நாடாளுமன்றில் விளக்கப்படும்

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 24

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வகையிலான அரசாங்கத்தின் பொருளாதாரப் பயணப்பாதை வேலைத்திட்டம் நிதியமைச்சர் நாடு திரும்பியதும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணர்த்தன தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் நாட்டில் நிலவும் நெருக்கடிநிலைக்குத் தீர்வு காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, மற்றும் அரசாங்கத்தின் நட்பு நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது நிதியமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சு சாத்தியமானதாக அமைந்துள்ளன. வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது தொடர்பான உறுதிமொழிகள் அந்த நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன. தற்போதைய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான சிறந்த பொறிமுறையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரப் பயணப்பாதைத் திட்டம் தொடர்பில் நிதியமைச்சர் நாடு திரும்பியதும் நாடாளுமன்றத்துக்கு அவரால் தெளிவுபடுத்தப்படும்.

நாட்டில் தற்போது நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் பல்வேறு கருத்துக்களை எதிர்க்கட்சிகள் தெரிவித்துவருகின்றன. எனினும் அவர்களது காலத்திலேயே தொழிற்சங்கப் போராட்டங்களை மேற்கொண்ட 80 ஆயிரம் பேர் பணியில் இருந்து நிறுத்தப்பட்டனர். இரண்டு ரூபா 80 சதம் அதிகரிப்பை கோரியே அந்தத் தொழிற்சங்கப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# அரசாங்கத்துக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்







வவுனியா, ஏப். 24

நாட்டில் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிராகவும் அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு வலியுறுத்தியும் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் ஆர்ப்பாட்டமும் கடையடைப்பும் நேற்று இடம்பெற்றது.

பூந்தோட்டம் வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தில் பொதுமக்கள், அயல் கிராமத்தவர்கள், இளைஞர்கள், பெண்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருள்களின் விலை அதிகரிப்புக் காரணமாக இன்று அனைத்து மக்களும் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். எமது குழந்தைகள் பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். எமது மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது. எரிபொருளுக்காக வரிசையில் நின்றே நாள்கள் நகர்கின்றன. இந்தநிலை எப்போது மாறப்போகின்றதோ என்ற அச்சம் இன்று அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. எனவே நாட்டையும், மக்களையும் படுகுழியில் தள்ளிய இந்த அரசு உடனடியாக பதவிவிலக வேண்டும் - என்றனர். (ம-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். கல்லுண்டாயில் மோட்டார் குண்டுகள்!

## விசாரணைகள் தீவிரம்

**யாழ்ப்பாணம், ஏப். 24**

**மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் குடியேற்றத் திட்டம் பகுதியில் சக்தி வாய்ந்த மூன்று மோட்டார் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.**



கல்லுண்டாய் கடற்கரைக்கு அண்மித்ததாகவுள்ள கண்டல்தாவரப் பகுதியில் இருந்து குறித்த மோட்டார்குண்டுகள் மீட்கப்பட்டன. அவை சிதைவடைந்த நிலையில் உள்ளன. அநேகமாக அவை போர்க்காலத்தைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து, அவர்கள் நீதிமன்ற அனுமதியைப் பெற்று குறித்த மோட்டார்குண்டுகளை மீட்கும் நடவடிக்கையை முன்னெடுத்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-27,125)



# கடலுணவுகளின் விலை வவுனியாவில் அதிகரிப்பு

வவுனியா, ஏப். 24

எரிபொருள்களின் விலையேற்றம் காரணமாக கடலுணவுகளின் விலைகள் வவுனியாவில் சடுதியாக அதிகரித்துள்ளன.

மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு போன்ற கடல்களில் பிடிக்கப்படும் கடலுணவுகளே அநேகமாக வவுனியாவுக்குக் கொண்டுவரப்படுகின்றன. எரிபொருள் விலையேற்றம் காரணமாக கடலுணவின் விலைகள் அதிகரித்துள்ளன. சுமார் 30 வீதத்தால் இந்த விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் ஒரு கிலோ விளைமீன் 1,000 ரூபாவாகவும், பாரை மீன் ஆயிரத்து 200 ரூபாவாகவும், முரல் மீன் 600 ரூபாவாகவும், சீலா மீன் 1,000 ரூபாவாகவும், கணவாய் ஆயிரத்து 200 ரூபாவாகவும், சின்ன இறால் ஆயிரத்து 200 ரூபாவாகவும், பெரிய இறால் ஆயிரத்து 800 ரூபாவாகவும், நண்டு ஆயிரத்து 600 ரூபாவாகவும், கீரி மீன் 700 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-18)


# VACANCIES @ BLC Campus Jaffna

We are looking for enthusiastic candidates for the following vacancies



**1. Enrolment Excecutive**

- Age limit between 18 to 35 Years
- Should possess good interpersonal skills
- Should be able to work on Weekends
- Should participate in Students' enrollment activities
- Attractive Salary packages will be offered
- Prior Experience in The Similar Positions will be an added advantage.

**2. Academic Coordinator**

- Should possess Higher Diploma or Degree Qualification
- Be fluent in English
- Should be able work independently
- Must be able to coordinate academic activities and handling documents
- Familiar to work with MS Office, Internet & Email
- Prior Experience in The Similar Positions will be an added advantage.

**How to Apply:**

**Please forward your detailed CV indicating the post applied with the details of two non-related referees to info@blccampus.com on or before 5th of May 2022**

BLC CAMPUS

**23/1, 4th Lane, Brown Road, Jaffna.**
T - 021 222 3355

E - info@blccampus.com
www.blccampus.edu.lk


# காணாமல் போன சைக்கிள் மீளவும் கிடைத்தது பெண்ணுக்கு

மதுபோதையில் சைக்கிள் எடுத்தவர் இரு தினங்களின் பின்னர் உரியவரிடம் ஒப்படைத்தார். சாவகச்சேரி -கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த பெண், கடந்த 21ஆம் திகதி சாவகச்சேரி சதொசவில் பொருள்களை வாங்கி சைக்கிளில் வைத்து விட்டு மற்றுமொரு கடையில் பொருள்கள் வாங்கச் சென்ற நிலையில் அவரது சைக்கிள் காணாமல் போயிருந்தது. இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில் நேற்று சைக்கிளை எடுத்துச் சென்றவர் குறித்த பெண்ணின் வீட்டுக்கு அதனை கொண்டு சென்று மதுபோதையில் தவறுதலாக எடுத்துச் சென்றதாகக் கூறி ஒப்படைத்துள்ளார். இதனையடுத்து பெண் முறைப்பாட்டை மீளப்பெற்றுள்ளார்.

(ம-14,9)

# விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஏப். 24

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் இருவர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நுணாவில்கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு முன்பாக இரு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

சாவகச்சேரி நீதிமன்றுக்கு முன்பாகச் சென்ற சைக்கிளை அதே பாதையால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதியதில் மட்டுவிலைச் சேர்ந்த 75 வயது முதியவர் காயமடைந்தார். காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

(ச-9)

# சட்டவிரோதமாக மணல் கடத்தலை உடனடியாகத் தடைசெய்க

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப்.24

பளை - வேம்பொடுகேணி கிராமத்தினூடாக சட்டவிரோதமாக மணல் கடத்தல் இடம்பெறுகின்றது என்றும், இதை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும் என்றும் பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

புலோப்பளை, அல்லிப்பளை, அறத்திநகர் ஆகிய இடங்களில் காணப்பட்ட பெருமளவு மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வேம்பொடுகேணி கிராம வீதிகளூடாக இரவு, பகலாக கொண்டுசெல்லப்படுகின்றன. இதனால், புலோப்பளை, அல்லிப்பளை, அறத்திநகர் ஆகிய இடங்களின் நிலத்தடி நீர் உவர்தன்மை மிக்கதாக மாறும் வாய்ப்புகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. அத்துடன், வேம்பொடுகேணி கிராம வீதிகளூடாக மணல் கடத்தப்படுவதால் அந்தப் பகுதி வீதிகள் பெருமளவு சேதமடைந்துள்ளன.

எனவே மேற்படி கிராமங்களின் வீதிகளையும் கனிம வளங்களையும் பாதுகாக்கும் நோக்குடன் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் - என்றனர்.

(ம-14,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனா கைகொடுக்கும்!

## சீனப் பிரதமர் கெகியாங் மஹிந்தவிடம் உறுதி!



கொழும்பு, ஏப்.24
இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த தொடர்ந்தும் சீனா தமது உதவிகளை வழங்கும் என சீனப் பிரதமர் லீ கெகியாங் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியில் அதிக உறுதித்தன்மையை ஏற்படுத்துவதற்கு இலங்கைக்கு சீனா ஆதரவளிக்கும் என சீனாவின் பிரதமர் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடனான தொலைபேசி உரையாடலின்போது உறுதியளித்தார் எனக் கூறப்படுகின்றது.

"நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் சவால்களை சீனா உணர்கின்றது. மேலும் உங்கள் நாட்டில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எங்களால் முடிந்த உதவியைச் செய்ய விரும்புகின்றோம்" என்றும் சீனாவின் பிரதமர் மேற்படி தொலைபேசி உரையாடலில் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள சில அவசர நிதிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசுடன் சீனா இணைந்து செயற்படும் என்றும் மஹிந்த ராஜபக்சவுக்கு சீனப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான விரைவான கண்காணிப்புப் பேச்சுகள், சீனாவுடனான இலங்கையின் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைத்தல் மற்றும் சூழ்நிலை அனுமதிக்கும்போது அதிகமான சீனச் சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் போன்றவை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே நட்பு மற்றும் உறவை மேம்படுத்துவதற்கும் நாங்கள் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம், மேலும் இந்த நேரத்தில் நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை நாங்கள் உணர்கின்றோம், சிரமங்களை நிவர்த்தி செய்வதற்கும் நாங்கள் ஒன்றாக வேலை செய்வோம் என்றும் சீனப் பிரதமர் கூறியுள்ளார். (எ-இ)





# அரசாங்கத்துக்கு எதிராக முல்லைத்தீவில் பேரணி!

முல்லைத்தீவு, ஏப்.24
**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி முல்லைத்தீவு, முள்ளியவளையில் நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், எரிபொருள்களின் விலையேற்றம், தட்டுப்பாடு, இரசாயனப் பசளைகளை இல்லாமற் செய்தமை, சிமெந்தின் விலையேற்றம், சமையல் எரிவாயு இன்மை, நாளாந்தம் பொருள்களின் விலையேற்றம் என்பவற்றால் மக்கள் நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நகர்த்த முடியாது தவிக்கின்றனர்.

அதையடுத்து நாடு முழுவதும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்திப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முள்ளியவளையிலும் நேற்று போராட்டம் முனனெடுக்கப்பட்டது. முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாக இருந்து கண்டனப் பேரணி ஆரம்பமானது. பேரணி முள்ளியவளை - முல்லைத்தீவு வீதியூடாக தண்ணீரூற்று, நெடுங்கேணி சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து முல்லைத்தீவு வீதி ஊடாக நீராவிப்பிட்டி மாஞ்சோலையை சென்றடைந்தது. (எ-19)

## ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகள் கொழும்பில் திருட்டு!

கொழும்பு, ஏப். 24
கொழும்பு, மோதரை, வில்பிரட் லேன் பகுதியிலுள்ள தொழிலதிபர் ஒருவரின் வீட்டில் கடந்த வியாழக்கிழமை சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான 80 பவுண் நகை மற்றும் 10 லட்சம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன என்று மோதரை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ-இ)



வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மற்றும் வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையம் இணைந்து நடத்திய இரத்தான முகாம் நேற்று சனிக்கிழமை வல்வை சிவகுரு வித்தியாசாலையில் நடைபெற்றது. (எ-26)

# மக்கள் போராட்டங்களுக்கு பெரு நிறுவனங்கள் ஆதரவு

கொழும்பு, ஏப். 24
இலங்கையின் பிரபல பெருநிறுவனங்கள் ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளதுடன், மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்க வேண்டும் என்றும், உறுதித்தன்மை அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளன.

இலங்கையின் பிரபல பெருநிறுவனங்கள் தற்போது நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடி தொடர்பாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. சில நிறுவனங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளன. சில நிறுவனங்கள் அரசியல், சமூக, பொருளாதார உறுதித்தன்மை அவசியம் என வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து கடும் கவலை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ள ஜோன் கீல்ஸ் ஹோல்டிங் நிறுவனம் உடனடித் தீர்வுகள் அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் அரசியல் தலைமை தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அந்த நிறுவனம் நல்லாட்சிக்கான மக்களின் குரல்களை செவிமடுக்க, குழப்ப நிலையை தவிர்ப்பதற்காக மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். இலங்கை தற்போதைய நெருக்கடிகளில் இருந்து மீளவேண்டும் என்றால் அனைத்துத் தரப்பினரும் அரசியல் பொருளாதார ஸ்திரமின்மையைத் தவிர்ப்பதற்காகவும் பொருளாதாரப் பேரழிவைத் தவிர்ப்பதற்காகவும் ஒன்றிணையவேண்டும் என்றும் கோரியுள்ளது.

ஏனைய முக்கிய நிறுவனங்களின் தலைவர்களும் இதேபோன்ற கருத்தை வெளியிட்டுள்னனர். ஹேமாஸ் ஹோல்டிங் நிறுவனம் தனது பணியாளர்கள் அமைதியான வழியில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமையை ஆதரிக்கின்றது என சமூக ஊடக பதிவில் தெரிவித்துள்ளது. ஹேமாஸ் குழாமின் பிரதமநிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்வராஜா "நாட்டை ஊழல் அற்ற பாதையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"எங்கள் மக்களின் கதறல்களை செவிமடுக்க வேண்டும் என்று எங்கள் தலைவர்களை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். நல்லாட்சி ஊழல் இல்லாத நிலை இனவாதமற்ற நிலை போன்ற கொள்கைகளின் அடிப்படையில் நாட்டை கொண்டு செல்வதற்கு அவசியமான அரசியல் பொருளாதாரச் சீர்திருத்தங்களை முன்னெடுக்குமாறும் எங்கள் தலைவர்களை கேட்டுக்கொள்கின்றோம்'' என அவர் தெரிவித்துள்ளார். சொவ்ட்லொஜிக், சிலோன் பிஸ்கட்ஸ் போன்ற நிறுவனங்களும் இவ்வாறான அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. (எ-இ)

# மைத்திரியை சந்தித்த அமெரிக்கத் தூதுவர்!

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி, "அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்தமையையிட்டு மகிழ்ச்சியடைந்தேன். இலங்கை மக்களின் அவல நிலையைக் கருத்திற் கொள்ளவேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்திடம் வேண்டுகோள் விடுத்தமைக்குத் தூதுவருக்கு நான் நன்றியைத் தெரிவித்தேன். இலங்கையில் அவரது பதவிக்காலம் வெற்றியடைவதற்கும் வாழ்த்துத் தெரிவித்தேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கத் தூதுவரும் இந்தச் சந்திப்பு குறித்து தமது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்த அவரது முன்னோக்கைக் கேட்பதற்கும், அமைதியான போராட்டத்துக்கான உரிமை உட்பட ஜனநாயகக் கோட்பாடுகளை நிலைநிறுத்துதல் மற்றும் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து விவாதிப்பதற்காகவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நான் சந்தித்தேன்" என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"சிறகு கிடைத்தால் பறப்பது மட்டும் வாழ்க்கையல்ல. சிலுவை கிடைத்தாலும் சுமப்பதுதான் வாழ்க்கை" - கவிஞர் கண்ணதாசன்

## ரணகளத்திலும் கிளுகிளுப்பு

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கி மக்கள் அடுத்தவேளை உணவுக்கு என்ன செய்வது என்று திண்டாடிக் கொண்டிருக்க, அரசியல்வாதிகளோ அது குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாது தங்கள் அரசியல் சித்து விளையாட்டுக்களைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டு மக்கள் ஜனாதிபதியும், அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்துகின்ற போதும், ஜனாதிபதி கோத்தாபயவும், அவரது அமைச்சரவையும் நாடு எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை நாங்கள் பதவி விலகவே மாட்டோம் என்று அதிகாரக் கதிரைகளை இறுகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதிக் கதிரையை தம்பி கோத்தாபய ராஜபக்ச இறுக்கிப் பிடித்திருக்க, இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் கூட, தானேதான் அதிலும் பிரதமர் என்று அண்ணன் மஹிந்த ராஜபக்ச அடம்பிடிக்கிறார் என்பது பிந்திய தகவல். சரி, பதவியை இறுகப் பிடித்தபடி இருப்பவர்கள் தங்கள் பொறுப்புக்களையாவது சரியாகச் செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை.

நாடு இப்போதுள்ள நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு அரசியல் நிலைத்தன்மை இருப்பது மிக அவசியமானது. வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும், பொருளாதாரத்தை நிமிர்த்தும் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்துவதற்கும் அரசியல் நிலைத்தன்மை முக்கியமானது. அதைவிடவும் இந்த நெருக்கடி நிலைமையால் நாட்டின் பிரதான வருமான மார்க்கமான சுற்றுலாத்துறையும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. ஏனைய நாடுகளில் இவ்வாறான நிலைமை ஏற்பட்டால், அந்த நாடுகளில் அதிகாரத்தில் உள்ளவர்கள் நாட்டு நலனுக்கு முன்னுரிமை கொடுத்தே செயற்படுவார்கள். ஆனால், இலங்கையின் துரதிர்ஷ்டம் இங்கு நிலைமையே வேறு மாதிரியிருக்கின்றது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும், பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் தங்கள் பதவிக் கதிரைகளை இறுகப்பிடித்திருப்பதால், நாட்டின் நெருக்கடி நாளுக்குநாள் அதிகரித்தே செல்கின்றது. பதவிகளில் இருக்கும் இவர்கள் இருவரும் தங்கள் பதவிகளைக் காப்பற்றிக் கொள்வதற்குச் செய்யும் தந்திரங்கள் மக்களைச் சலிப்படையச் செய்திருக்கின்றன. அமைச்சரவை மாற்றங்களும், பதவிவிலகல்களும், கட்சித் தாவல்களும், பேரம் பேசல் களும் என கொழும்பு அரசியல் சாக்கடையாக மாறியிருக்கின்றது. நாடு எத்தனை பெரிய ஆபத்தில் இருக்கின்றது என்பதைக் கிஞ்சித்தும் யோசிக்காது நாடாளுமன்றத்தில் தனிநபர் துதி பாடிக் கொண்டிருக்கிறார்கள் அரசியல்வாதிகள். இந்த ரணகளத்திலும் அவர்களுக்கு அரசியல் கிளுகிளுப்புக் கேட்கின்றது.

இந்த நிலைமை தொடர்ந்தால் இலங்கை இன்னும் பல ஆண்டுகளுக்கு மீண்டெழ முடியாது. இந்த நெருக்கடி நிலைமையை சீராக்கி, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். ஜனாதிபதியும், அரசாங்கமும் பதவி விலக வேண்டுமானால் அதை நோக்கிய துரிதமான செயற்பாடுகள் தேவை. அறிக்கைகள், வாய்ப்பேச்சுக்களை விட்டு எதிர்க்கட்சிகள் செயலில் இறங்க வேண்டும். மக்களும் அழுத்தங்களை அதிகரிக்க வேண்டும். இந்த அரசியல் நெருக்கடி நிலையை நீடிக்க விடுவது எமது தலையில் நாமே மண் அள்ளிப் போடுவது போன்றது என்பதை அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ளவேண்டும்.



# மஹிந்த பதவிவிலக மறுத்தால் எதிரணியின் பிரேரணைக்கு ஆதரவு!

## சுயாதீன அணிகள் அதிரடி முடிவு

**கொழும்பு, ஏப். 24**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகாவிட்டால், அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதென நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் அணிகள் தீர்மானித்துள்ளன.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உள்ளடங்கலான 11 கட்சிகளின் அணியும், அநுரபிரியதர்சன யாப்பா தலைமையில் இயங்கும் குழுவுமே இந்த முடிவை எடுத்துள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச உட்பட தற்போதைய அமைச்சரவை பதவிவிலகி, சர்வகட்சி இடைக்கால அரசமைப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும் என சுயாதீன அணிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கு அரச தரப்பில் இருந்து இன்னும் பச்சைக்கொடி காட்டப்படவில்லை. இந்த நிலையிலேயே தமது கோரிக்கை ஏற்கப்படாவிட்டால், நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் ஆட்சியைக் கவிழ்க்க சுயாதீன அணிகள் முடிவெடுத்துள்ளன.

தற்போது ஆளுங்கட்சி பக்கம் உள்ள டலஸ் அழகப்பெரும உட்பட சுமார் 20 பேர்வரை தமக்கு ஆதரவை வழங்குவார்கள் என சுயாதீன அணிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி அடுத்த வாரம் முன்வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-44)

# பிரதி சபாநாயகர் தெரிவில் இரகசிய வாக்கெடுப்பு முறை

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, ஏப். 24

நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பதவிக்கு இரகசிய வாக்கெடுப்பு மூலமே உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்படவுள்ளார். இதனால் அரசியல் களம் மீண்டும் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது.

9ஆவது நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் பதவியை வகித்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய கடந்த வெள்ளிக்கிழமையுடன் பதவியில் இருந்து விலகிவிட்டார்.

எனவே, மே 4ஆம் திகதி நாடாளுமன்றம்கூடும்போது, முதல் நடவடிக்கையாக பிரதி சபாநாயகரை தெரிவு செய்யவேண்டும்.

ஒருவர் மட்டும் முன்னிலையானால் ஏகமனதாக தேர்வு இடம்பெறும். எனினும், எதிரணி சார்பிலும் பிரதி சபாநாயகர் பதவிக்கு உறுப்பினர் ஒருவர் போட்டியிடவுள்ளார். எனவே, வாக்கெடுப்பு மூலமே தேர்வு இடம்பெறவுள்ளது.

(ம-44)

# குவைத் டினாரின் பெறுமதி உச்சம்

கொழும்பு, ஏப். 24

மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி குவைத் டினாரின் பெறுமதி ஆயிரத்து 96.62 ரூபாவாக பதிவாகியுள்ளது. அத்துடன் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 339.99 ஆக பதிவாகிவுள்ளது.

இலங்கையில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு பணவீக்கம் தலைவிரித்தாடுகின்றது. இதனால் நாணய மாற்று விகிதமும் டொலருக்கான நிகர்ப்பெறுமதியும் நாளுக்குநாள் எகிறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(சு-இ)

நாளை 25.04.2022 திங்கட்கிழமை சித்திரை 12

சுபநேரம் : 12.00 - 01.30
ராகுகாலம்: 07.30 -09.00

உலக மலேரியா தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்ச்சல் வந்தால் கவனமாக இருங்கள்

## சுகாதாரப்பிரிவினர் அறிவிப்பு

சாவகச்சேரி, ஏப். 24

**வாந்தி, வயிற்றோட்டம், கடுமையான உடல் அசதி ஆகியவற்றுடனான காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எச்சரிக்கையுடன் இருங்கள் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சிப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக வாந்தி, வயிற்றோட் டம், கடுமையான உடல் அசதி போன்ற அறிகுறிகளோடு சிறியோர் களிலிருந்து பெரியோர்வரை காய்ச் சலால் பீடிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன் இவர்களில் சிலருக்கு டெங்குக் காய்ச்சலும் ஏற்பட்டுள்ளது. குறித்த நோய்கள் தொடர்ச்சியாக இருப்பின் நீரிழப்பு ஏற்பட்டு ஆபத் தான மருத்துவ நிலைமைகளை எதிர்கொள்ள வழிவகுத்துவிடும் என்பதால் அரச மருத்துவமனை களுக்குச் சென்று உரிய சிகிச்சை களைப் பெற்றுக்கொள்ளவேண் டும். நோயாளிகள் ஜீவனி பானம், செவ்விளநீர், வீட்டில் தயாரிக்கப் பட்ட பழரசம், கஞ்சி, சூப் வகைகள் போன்ற நீராகாரங்களை எடுத் துக்கொள்வதோடு சோடா போன்ற செயற்கைப் பானங்களைத் தவிர்த் துக்கொள்ளுங்கள். மேலும் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு எந்த வகையான நோய் நிலைமை கள் ஏற்படினும் அதுபற்றி உங்கள் பகுதி குடும்ப நல உத்தியோகத்த ருக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும் - என்றனர். (ம-14,159)



மன்னாரில்

## உணவுப் பாதுகாப்பு ஆய்வுக்கூட்டம்

மன்னார், ஏப். 24

அரசாங்கமும், உலக உணவு அமைப்பும் இணைந்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொரு ளாதார நெருக்கடி காரணமாக மக்கள் மத்தியில் உணவு பாதுகாப்புத் தொடர்பில் ஆராயும் கூட்டங் களை மாவட்ட ரீதியாக நடத்தி வருகின்றன. அதன் படி மன்னார் மாவட்டத்தில் இந்த ஆய்வுக்கூட்டம் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத் தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் இன்றைய சூழலில் உண வுப் பாதுகாப்பு தொடர்பில் உருவாகியுள்ள பிரச் சினைகள் மற்றும் அதனைத் தடுக்க மேற்கொள் ளப்பட நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதில் மன்னார் மாவட்டச் செயலர், மாவட்ட செய லக திட்டமிடல் அதிகாரிகள், உலக உணவுத் திட்ட மாவட்டப் பொறுப்பாளர், கமநல சேவை திணைக் கள உதவிப் பணிப்பாளர், மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், விவசாய விரிவாக்கல் திணைக்கள அதிகாரிகள், சுகாதார சேவைகள் பணிப்பாளர், கால்நடைத் திணைக்கள அதிகாரி கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

உணவுப் பிரச்சினை தொடர்பில் 17 மாவட்டங் களில் கடந்த 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை அங்குள்ள மாவட்டச் செயலர்கள் மற் றும் அரசாங்க அதிகாரிகளுடன் இணைந்து உலக உணவுத்திட்ட அதிகாரிகள் ஆராய்ந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-60)



முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய உத்தியோகத் தர்களின் நிதிப்பங்களிப்பில் பொருளாதாரம் நலிவடைந்த பாடசாலை மாணவர்கள் 77 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ச-19)



## தமிழ்ப் புலம்பெயரிகளால் 12 இலட்சம் ரூபா நிதியுதவி

முல்லைத்தீவு, ஏப். 24

மாங்குளம் பிரதேசத்தில் பொருண்மியம் நலிந்த மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்ப் புலம்பெயரி களால் 12 இலட்சம் ரூபா நிதியுதவி வழங் கப்பட்டது. வி.பி.பவுண்டேசனின் ஏற்பாட்டில் மாங்குளம் பிரதேசத்தில் தெரிவுசெய்யப் பட்ட கூட்டுறவு அங்கத்தவர்கள் 24 பேருக்கு ஒரு பயனாளிக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வைப்பிலிடப்பட்ட பணப்புத்தகம் மாங் குளம் பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டது. பொருண்மி யம் நலிந்தவர்களின் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுயதொழில் ஆகியவற்றுக்காக இந்த நிதி வழங்கப்பட்டது.

நிகழ்வில் அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், பெண்கள் அமைப்பின் தலைவர்கள், வி.பி.பவுண்டேசன் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஆகி யோர் இதில் கலந்துகொண்டனர். (ம-14,19)

## முன்பள்ளி தொடக்க விழா

முல்லைத்தீவு, ஏப். 24

செல்வபுரம் முன்பள்ளியின் புனரமைப்புப் பணிகளின் பின் னரான தொடக்கவிழா நேற்று முன்தினம் முன்பள்ளியில் இடம்பெற்றது.

முன்பள்ளி பாடசாலை பெற் றோர், ஆசிரியர் சங்கத் தலை வரின் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந் தினர்களாக, கிராம உத்தியோ கத்தர் உ.கோபினி, சமுர்த்தி அபி விருத்தி உத்தியோகத்தர் வே.சந் திரகாந்தன் உட்பட சமூக மட்ட



அமைப்புகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். (ம-14,19)

## 'அறிதலும் பகிர்தலும்' 14 ஆவது தொடர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 24

விதை குழுமத்தின் ஏற்பாட்டில் மெய்நிகர் வழியில் இடம்பெற்றுவரும் "அறிதலும் பகிர்தலும்" என்ற தொடர் நிகழ்வின் 14 ஆவது நிகழ்வு "அரசின் தோற்ற மும் வளர்ச்சியும்; சமூக மானிடவியல் நோக்கு" என்ற தலைப்பில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதான உரையை சமூகவியல் ஆய்வறிஞர் கந்தையா சண்முகலிங்கம் நிகழ்த்தவுள்ளார். (ம-14)



மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் ப.பாலபவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் உதவிக்கல்விப்பணிப்பாளர் பி.ஆர்.அஸ்லம் கலந்துகொண்டார். (ச-213)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஏப். 24

இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தால் கல்விமாணி ஆரம்பக்கல்வி கற்கைநெறிக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்க ளில் சித்தியடைந்த மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முதலாம் மொழி, கணிதம் உட்பட 6 பாடங் களில் சித்தியடைந்த யாவரும் இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க லாம். விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி வரை நிகழ் நிலையில் விண்ணப்பிக்க முடியுமென யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப் பாளர் தெரிவித்துள்ளார். (ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உக்ரைனில் போர்க்குற்றங்கள் நடந்திருக்கலாம்

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு



நியூயோர்க், ஏப்.24

**உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் போரில் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டதாகத் தோன்றுகிறது என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் தெரிவித்துள்ளார்.**

உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் கண்மூடித்தனமாக ஷெல் மற்றும் குண்டுகளை வீசித் தாக்கியதில் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மருத்துவமனைகள், பாடசாலைகள் எனப் பல இடங்களும் தாக்கப்பட்டுள்ளன. இவை போர்க்குற்றங்களுக்கு இணையான நடவடிக்கைகளாகும்.

போர் ஆரம்பமாகி இதுவரை 5ஆயிரத்து 264 பொதுமக்கள் உயிரிழப்பு தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பால் சரிபார்க்கப்பட்டது. அதில் 92.3 சதவீத இறப்புக்கள் உக்ரைன் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பதிவு செய்யப்பட்டிருப்பது தெரியவருகிறது.

சர்வதேச மனிதாபிமான சட்டம் வெறுமனே புறக்கணிக்கப்படவில்லை, தூக்கி எறியப்பட்டதுபோல் தோன்றுகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## உக்ரைன்- ரஷ்யா போரை நிறுத்த ஐ.நா.பொதுச் செயலர் முயற்சி

### இருநாட்டு அதிபர்களையும் சந்திக்கிறார்

நியூயோர்க், ஏப்.24

உக்ரைன்- ரஷ்யா போரை நிறுத்த ஐ.நா. பொதுச்செயலர் இரு நாட்டு அதிபர்களையும் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன்மீது ரஷ்யா இரு மாதங்களுக்கு மேலாக போரை நடத்திவருகின்றது. உக்ரைனின் தலைநகர் கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது ஏவுகணை, வான்வழி தாக்குதல் நடத்தப்படுகின்றன.

தற்போது உக்ரைன் துறைமுக நகரமான மரியுபோலை கைப்பற்றிவிட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இந்தப் போரை நிறுத்துமாறு ரஷ்யாவுக்கு ஐ.நா. சபை மற்றும் உலகநாடுகள் பலவும் கோரிக்கைவிடுத்து வருகின்றன. எனினும் அதனை நிராகரித்து ரஷ்யா தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டரெஸ் போரை நிறுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் எதிர்வரும் 26ஆம் திகதி ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்குச் சென்று ரஷ்ய அதிபர் புடினைச் சந்தித்துப் பேசவுள்ளார். அத்துடன் எதிர்வரும் 28ஆம் திகதி உக்ரைன் அதிபர் ஷெலன்ஸ்கியையும் அன்ரனியோ குட்டரெஸ் சந்தித்துப் பேசவுள்ளார். இதனை ஐ.நா. சபை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## ஆப்கான் குண்டுவெடிப்புக்கள் ஐ.எஸ்.அமைப்பு பொறுப்பேற்பு

காபூல், ஏப்.24

ஆப்கானிஸ்தானில் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்கு ஐ.எஸ்.அமைப்பு பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆப்கானிஸ்தானின் குண்டுஸிலுள்ள மசூதியில் நேற்றுமுன்தினம் தொழுகையின்போது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 33 பேர் கொல்லப்பட்டதுடன் 43 பேர் காயமடைந்துள்ளனர் எனத் தலிபான் அரசு தெரிவித்துள்ளது.

இதேபோல் மசார்இஷரிப் மற்றும் ஷேடோகான் ஆகிய பள்ளிவாசல்களிலும் குண்டுவெடிப்பு நிகழ்ந்தன.

இந்த நிலையில் இந்தத் தாக்குதல்களுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## குழந்தைகள் கண்முன்னே இளம்பெண் குத்திக்கொலை

### டில்லியில் பயங்கரம்

புதுடில்லி, ஏப்.24

டில்லியின் தென்மேற்குப் பகுதியில் இளம்பெண் ஒருவரை பட்டப்பகலில் அவரது குழந்தைகள் கண்முன்னே மர்ம நபர் ஒருவர் குத்திக்கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதில் மர்ம நபர் ஒருவர் இரு குழந்தைகளுடன் நடந்து சென்ற பெண்ணை துரத்திச் சென்று அந்தப் பெண்ணின் குழந்தைகள் கண்முன்னே சரமாரியாகக் கத்தியால் குத்திவிட்டு தப்பியோடுவது பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் தலைமறைவான குற்றவாளியைக் கண்டுபிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## கென்யா முன்னாள் அதிபர் காலமானார்

கென்யாவின் முன்னாள் அதிபர் மவாய் கிபாகி தனது 90 ஆவது வயதில் நேற்றுமுன்தினம் காலமானார்.

இவர் கடந்த சில ஆண்டுகளாக உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார். (ச-இ)

## உக்ரைனின் தாக்குதலாலேயே போர்க்கப்பல் சேதம்

### ஒப்புக்கொண்டது ரஷ்யா

கீவ், ஏப்.24

உக்ரைன் இராணுவம் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ரஷ்யாவின் மோஸ்க்வா போர்க்கப்பல் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

போரில் கருங்கடலில் இருந்து உக்ரைன் மீது கடல்வழித் தாக்குதலை தலைமை தாங்கி நடத்தியது மோஸ்க்வா என்ற போர்க் கப்பலாகும். இந்தக் கப்பல் முந்தைய சோவியத் யூனியன் காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

இதில் 500க்கும் மேற்பட்ட சிப்பந்திகள் இருந்துள்ளனர். கடந்தவாரம் இந்த கப்பல் தீப்பற்றி வெடித்து பெரும் சேதமடைந்தது. கப்பலில் இருந்த வெடிபொருள்கள் காரணமாகவே போர்க்கப்பல் வெடித்தது என ரஷ்யா தெரிவித்தது.

இந்தநிலையில், ஒரு வாரத்துக்குப் பின் உக்ரைன் தாக்குதலிலேயே மோஸ்க்வா கப்பல் தீப்பற்றி சேதமடைந்தது என ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.

இந்தக் கப்பலில் ஏற்பட்ட சேதத்தால் ரஷ்யா பலத்த பின்னடைவைச் சந்தித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** எடுத்த முயற்சி தாமதப்படுகிறதே என்று கவலைப்பட வேண்டாம். இரவில் பயணத்தைத் தவிர்க்கவும். சுபச்செலவுகள் ஏற்படும். பணிச்சுமை அதிகமாகும்.

**இடபம்:** வீடு மாற்றம் ஏற்படும். சிறு தேவை நிறைவேறும். உங்களின் சிறிய அலட்சியத்தால் வீண்செலவு ஏற்படலாம். செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியத்தில் முழுமையான கவனம் தேவை. செல்வாக்கு அதிகரிக்கும். நல்ல திருப்பம் ஏற்படும். உறவினர் ஒருவரின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பீர்கள்.

**கடகம்:** நீங்கள் விரும்பி எதிர்பார்த்த செயல் ஒன்று நடைபெறும். நண்பர்களுக்கு இடையே இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். உங்களின் கடுமையான உழைப்பு பலன் தரும்

**சிம்மம்:** கூடுதல் முயற்சிக்கு பிறகு பணியில் விரும்பிய மாற்றம் கிடைக்கும். உங்களின் விருப்பத்தில் சிறிய தடை ஏற்பட்டாலும் அது நிறைவேறும். ஈடுபாட்டுடன் செயற்படுவீர்கள்.

**கன்னி:** செயல்பாடுகளில் வேகம் [illegible] முடிவுக்கு வரும். உங்களுக்கு இருந்து வந்த குழப்பம், மனஅழுத்தம் தீரும்.

**துலாம்:** பணியிடத்தில் எதிர்பார்த்த ஆதரவைப் பெறுவீர்கள். நீங்கள் பேசும் வார்த்தைகளால் சிரமம் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். குடும்பத்தின் வருமானம் பெருகும். மகிழ்ச்சி கூடும்.

**விருச்சிகம்:** பணியிடத்தில் தகுதிக்கேற்ற மேன்மை அடைவீர்கள். பயணத்திட்டத்தில் சந்தோஷம் அளிக்கக்கூடிய மாற்றம் உண்டு. எதிர்பாராத ஒருவரின் ஒத்துழைப்பால் நன்மை கிடைக்கும்.

**தனுசு:** எந்தச்செயலிலும் நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டிய நாள். பணியிடத்தில் மேலதிகாரியின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**மகரம்:** உழைப்பால் நல்ல பலன்கள் கிட்டும். பொறுமை தேவை. நவீனப் பொருள்கள் வாங்கும் முயற்சி வெற்றி தரும். மேலதிகாரிகளுடன் நிதானமாக நடந்து கொள்வது நல்லது.

**கும்பம்:** எந்தச்செயலிலும் தாமதம் ஏற்பட்டு பிறகு கைகூடி வரும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியான சூழ்நிலையும் நிலவும். புதிய விஷயம் ஒன்றை கற்பீர்கள். பரபரப்பும் குறையும்.

**மீனம்:** குழந்தைகளின் வாழ்வில் குதூகலம் அதிகரிக்கும். மற்றவர்கள் விஷயத்தில் மூக்கை நுழைக்க வேண்டாம். குடும்பத்தில் ஒருவருக்கு நல்ல செய்தி வீடு தேடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாம் ஆண்டில் இதயம் சுமக்கும் நினைவுகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 20 . 05 . 1927 |  | 24 . 04 . 2003 |

## அமரர் தொம்மை பிலிப்பு (அண்ணாவியார்)

ஆண்டு பத்தொன்பது ஆயினும் நின்
அன்பான நினைவு மாறவில்லை எம் உள்ளமதில்
அகிலமதில் நாம் நல்வாழ்வு வாழ
வழி செய்த நம் அன்புத் தந்தையை
நன்றி பொங்கும் உள்ளத்துடன்
நினைவு கூருகின்றோம் இந்நாளில்

தாழ்ச்சி நிறை எண்ணமதை
உம்மிலே வளர்த்தெடுத்து
அதன்மூலம் உயர்வு பெற
ஆசித்த எம் அன்புத் தகப்பனே
நின் ஆன்மா விண்ணக பேரின்பத்தில்
மகிழ்ந்திருக்க இறையருள்
- வேண்டுகின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம்.

தீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cs 19455) (2.6)

# மரண அறிவித்தல்

## சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரி (இத்தா)



காளிகோவிலடி சங்கானையைப் பிறப்பிட மாகவும், ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தினை வதிவிடமாக கொண்ட சிவபாதசுந்தரம் இராஜேஸ்வரி நேற்று (23.04.2022) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப் பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் மகளும், சிவபாதசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நவரத்தினம், துரைராசா நாகேஸ்வரி மற்றும் செல்வராசா கனகலட்சுமி, கனகாம்பிகை இரங்கநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு. எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 19478) (4/6)

தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 02 . 11 . 1938 |  | 23 . 04 . 2022 |

## திருமதி றோஸ் றெஜினா சிங்கராயர் (சோதி)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், யாழ்நகர், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றோஸ் றெஜினா சிங்கராயர் நேற்று (23.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபதேயு சிங்கராயர் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் - புனித பத்திரிசியார் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், பீலிக்ஸ் வலன்ரைன்ஸ், சபீனா (லண்டன்), அருட்திரு றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் CMF (ஆற்றுப்படுத்துனர் - தேசிய குருமடம், அம்பிட்டிய), குமாரதாஸ் புளோரன்ரைன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லக்கி, அவலின், அருந்ததி ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்சன், மரீனா, றெக்ஸ்சன், சாளினி, மனாஷே, அஜித்தா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (25.04.2022) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை குருக்கள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்திரு. எஸ்.றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் CMF
மகன்

தொடர்பு:
077 206 1991

(cs44288) (2.6)

# குருதி சேகரிப்பு பைகளுக்கும் குருதி வங்கியில் தட்டுப்பாடு!


கொழும்பு, ஏப்.24

மத்திய குருதி வங்கியில், குருதியை சேமிக்கும் பிளாஸ்ரிக் பைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, குருதியேற்றத்துக்கான உபகரணங்களுக்கும், அடுத்த வாரமளவில் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என சுகாதார தொழிற்சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அரச மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் கே திலக்கரத்ன, குறிப்பிட்ட காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்காமையால், நோயாளர்களுக்கான சிகிச்சைப் பணிகளுக்கு பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவமனைக் கட்டமைப்பில், மருந்துகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் கையிருப்பு தீர்ந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய குருதி வங்கி உள்ளிட்ட ஏனைய அனைத்துக் குருதி வங்கிகளிலும், குருதியை சேமிப்பதற்கான பிளாஸ்ரிக் பைகள் உள்ளிட்ட அவசியமான ஏனைய உபகரணங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குருதியேற்றத்துக்கான உபகரணங்கள் கிடைக்காவிட்டால், நாட்டின் மருத்துவக் கட்டமைப்பில் குருதியேற்றத்தில் பெரும் பிரச்சினை ஏற்படக்கூடும். எனவே இந்தப் பிரச்சினையைத் தீரப்பதற்காக, இயன்றளவு உச்சப்பட்ச நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுகாதார அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது என்று அரச மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் கே திலக்கரத்ன தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் தொடர்பில், மத்திய குருதி வங்கியின் பணிப்பாளரான மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்கவிடம் வினவியபோது பதிலளித்த அவர், குருதியை சேமிப்பதற்கான பிளாஸ்ரிக் பைகளின் கையிருப்பில் ஓரளவு வீழ்ச்சி நிலவினாலும், இந்த நிலைமையை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, முகாமைத்துவப் பணிகளை மிகவும் அவதானத்துடன் முன்னெடுக்கவேண்டும் என்று விசேட மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று மத்திய குருதி வங்கியின் பணிப்பாளரான மருத்துவர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்தார். (எ-இ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 . 03 . 1937 |  | 23 . 04 . 2022 |

## திருமதி இராசமணி சரவணமுத்து

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி சரவணமுத்து நேற்று (23.04.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, அன்னலட்சுமி, சீவரட்ணம், சிவயோகம் மற்றும் வாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராஜேஸ்வரி, சண்முகவடிவேல் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குணபாலசிங்கம் மற்றும் தேவராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஜரூபன், நிருஜா - குகதாஸ், நிருஜன் - யதுஷா, திரிபுரா, சுபிட்ஷா ஆகியோரின் பேர்த்தியும், நிலாஸ், நிவிஸ், ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible],
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(cs19464)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PHYSICE CLASSES (A/L)

Personal, Group Class & Paper Class. (CS 19479) (4/6)

S.Gunavarshan (B.sc)
077 538 8670

## காணி விற்பனைக்கு உண்டு

நாவற்குழி உணவு களஞ்சியத்திற்குப் பின்புறமாக 2.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (CS 19454) (4/6)

077 365 3989, 077 825 2839

## வீட்டுப்பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் சிறு குடும்பத்திற்கு வீட்டில் தங்கி வீட்டு வேலைகள் பார்ப்பதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை. (CS 37877 (4/6)

தொடர்புக்கு:- 077 400 1836

விஷேடமாக Non RC மற்றும் **கிறிஸ்தவ ஆவிக்குரிய சபைகளுக்காக உருவாக்கப்பட்ட** திருமண இணையத்தளம்

**www.kirubaimatrimony.com**

பதிவுகள் இலவசம்

தொடர்புகளுக்கு

011 7732288 / 076 1972285 (Whats app)

## வேலை வாய்ப்பு

தேங்காய் எண்ணை ஆலைக்கு வேலையாட்கள் தேவை. (ஆண் / பெண்) இருபாலாரும்

(CS 44283) (3/6) 077 171 2336

## கணித வகுப்பு

பல வருட அனுபவமுள்ள கணித பாட ஆசிரியரால் பிரத்தியேக வகுப்புக்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். ஆண்டு 8 தொடக்கம் 11 வரை (Past Paper Class) வேலைநாள்களில் பிற்பகல் 2.30 தொடக்கம் 4.30 வரை *(தண்ணீர் ஊற்று, முள்ளியவளை, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு)* நேரம் பொருத்தமானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

075 874 5237

## பணிப்பெண் தேவை

முல்லைத்தீவு முள்ளியவளையில் 2 வயதுக் குழந்தையை பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. (வீட்டில் தங்கியிருந்து பணி புரியக்கூடியவர்கள்) விரும்பத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

(CS 00996) (3/6) 071 134 4873

## வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 072 554 7154 (CS 44162) (3/6)

## வாடகைத்தாய் தேவை

கொழும்பிலுள்ள திருமணமான தம்பதியர்களுக்கு IVF ஊசி மூலம் செய்வதற்கு 30 வயதிற் குறைவான பெண் ஒருவர் வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும் இரகசியம் பேணப்படும்.

(ACO 19058) (3/6) 075 441 2764

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அராலி வீதியில் 65 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(25 இலட்சம் ஒரு பரப்பு)

076 195 6406

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறூட், ரகன் புறூட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வாத்தியங்கள் விற்பனைக்கு

எம்மிடம் நல்ல நிலையிலுள்ள ஓகன், வீணை, சுருதிப்பெட்டிகள் விற்பனைக்குண்டு.

K.P. பாலகிருஸ்ணன் - 021 222 2940
K.K.S.வீதி, பூநாறிமரத்தடி, நாச்சிமார்கோயிலடி.

## எரிபொருள் நிரப்புனர் மற்றும் கணக்கு உதவியாளர் தேவை

யாழ்ப்பாணம் (இருபாலை மற்றும் கொக்குவிலில்) இயங்கிவரும் இரு பிரபல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் நிரப்புனர்கள் மற்றும் கணக்கு உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர். நேர்முகத் தேர்வு இல.341 கண்டி வீதி, அரியாலையில் அமைந்துள்ள எமது நிறுவனத்தில் பிற்பகல் 2.00 மணியிலிருந்து 4.00 மணி வரையில் இடம்பெறும்.

தொடர்பு : 077 226 7172 (CS 44285) (3/6)

## நினைவஞ்சலி

(24.04.2022)



மறைவு 01 . 01 . 1985

மறைவு 24 . 04 . 1987

**திரு. திருமதி ஏபிரகாம் மாணிக்கம்**

(6/1 மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்)

(சிறைச்சாலைகள் முன்னை நாள் மேற்பார்வையாளர் - வெலிக்கடை/போஹம்பரை/யாழ்ப்பாணம்)

தெய்வங்களே உங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டுகின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சுப்பிரமணியம் சுபானந்**

(உசன், கனடா)

**அன்னை மடியில்** 30.12.1983 — **இறைவன் அடியில்** 21.03.2022

நம்பமுடியவில்லை ஓர் திங்கள் கடந்ததை
வார்த்தைகளில் வடிக்கமுடியவில்லை உன்
திடீர் பிரிவின் துயரத்தை

உன் அழகிய முகமும்
கள்ளம் கபடமற்ற சிரிப்பும்
அவசர வேக நடையும்
உன் பாசமான உற்சாகப்பேச்சும்
என்றென்றும் எம் நினைவலைகளில்
நீங்காது நிறைந்திருக்கும்.

உசன்,
மிருசுவில். (cs.44166) (2.6)

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்**

## வேலைவாய்ப்பு

பலாலி வீதி, கோண்டாவில் சந்தி அருகாமை LOLC நிறுவனத்திற்கு புதிய கிளை ஆரம்பிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**2022 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் விண்ணப்பிக்க முடியும்.** (CS 19476) (4/6)

077 560 2579

## Study in UK / Canada / Spain

BEVERLEY INTERNATIONAL

- IELTS தகைமை உள்ளவர்கள் அல்லது அற்றவர்கள்
- பகுதி நேர வேலைவாய்ப்பு
- புலமைப்பரிசு (Scholarships) உண்டு
- கல்வியின் பின் வேலை வாய்ப்பிற்கான விசா பெற்றுக்கொடுக்கப்படும் PSW
- PR பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள்
- சாதாரணக் கல்விக் கட்டணம்
- வங்கி பண வைப்பிற்கான வழிகாட்டல்

உடன் பதிவுகளுக்கு இன்றே எம்மை அழையுங்கள்!!!

மேலதிக தகவல்களுக்கு : 0776 929 773

பாத்திமா : 0706 697 660 | வேணுகா : 0718 517 994

**Beverley International**

Head Office - No. 3/5, 3rd Floor, Kollupitiya, Colombo - 03, Sri Lanka.
Tel : 0112 576 656
Jaffna Office - No. 401, Clock Tower Road, Jaffna. Tel : 021 22 10 277

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.


01. பொதிசுமப்பவர்
02. பொதி செய்பவர்
03. உதவியாளர்கள்

வயதெல்லை (21-40) இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**(கடமை நேரத்தில் அழைப்பை ஏற்படுத்தவும் 9.00AM-5.00PM)**

021 222 4766 வ.வ. இராமசாமிப்பிள்ளை அன்சன்ஸ் இல.58, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்னை மடி 21.03.1935 — சிவன் சேவடி 26.03.2022

கடந்த (26.03.2022) சனிக்கிழமை சிவனடியை சேர்ந்துவிட்ட எமது குடும்பத்தலைவர்

**பொன்னம்பலம் வீரபத்திரன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (24.04.2022) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு புனித வில்லூன்றி தீத்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியகிரியைகள் அவரது இல்லத்திலும் நடைபெறும். இந் நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**குடும்பத்தினர்**
021 222 5054
193, காதிஅபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவுநாள்

மண்ணில் 03 . 06 . 1937



விண்ணில் 24 . 04 . 2021

## அமரர் சவிரிமுத்து யோசப் (KAYTS)

( மேல் நீதிமன்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம் யோசப் அண்ணன் - அம்பலப்புலம்)

மௌனத்தின் அன்பே !
பாச உயிரின் நெஞ்சே !
எம்மை கரங்களில் தாங்கிய தருணமே
இறை நம்பிக்கையுடன் அறிவையூட்டி
துன்பத்தை துணிவோடு கடக்க
மௌனபாசத்தால் வழி நடத்திய ஐயா!
ஆண்டொன்று சென்றதோ !

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மனைவி - 077 306 9588
எட்மன் கமிலஸ் (மகன் - UK 0044 0785 3830 949)
சில்வஸ்ரர் (மருமகன் - 077 809 6151)

(cs.19443) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 10 - 1951



மறைவு 22 - 04 - 2022

## சண்முகராசா தவயோகம்

யாழ் புத்தூரை பிறப்பிடமாகவும் இல. 722 யோகபுரம் மத்தி, யோகபுரம் மல்லாவியை வதிவிடமாகக் கொண்ட சண்முகராசா தவயோகம் நேற்று முன்தினம் (22.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், கந்தசாமி பரமேஸ்வரி தம்பதியினரின் மருமகளும் சண்முகராசாவின் அன்பு மனைவியும், தவநேசன், தவச்செல்வி, தமிழ்நேசன், தமிழ்செல்வி, சிவநேசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜிதா, ஆனந்தராசன், சிவாஜினி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சஞ்சீவன், கஜிதன், சஜீவன், சானுஜன், தசீனா, சங்கவி, தசிதன், லதுஷன், வானுஜன், திஷான், லபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அனிஞ்சியன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இல. 722,
யோகபுரம் மத்தி,
மல்லாவி.

தகவல் :
குடும்பத்தினர்
077 283 2106, 077 907 7235

# காணவில்லை



கோம்பாவில் திம்பிலி
புதுக்குடியிருப்பைச் சேர்ந்த
**சுந்தரராஜன் தமிழழகன்**
**(காந்தன்)**

வயது - 22 என்பவர் கொழும்பில் வேலைக்கு சென்ற இடத்தில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக காணவில்லை. இவரின் விபரம் அறிந்தவர்கள் கீழுள்ள இலக்கத்திற்கு தொடர்புகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். (cs.18131) (2.6)

**076 706 8159, 077 948 4960**

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 01 . 1944



மறைவு 22 . 04 . 2022

## வேலும்மயிலும் மங்களேஸ்வரி

கோவில்வாசல், இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலும்மயிலும் மங்களேஸ்வரி நேற்று முன் தினம் (22.04.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பரிபூரணம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கதிரித்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், திரு.வேலும்மயிலும் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) அவர் களின் அன்பு மனைவியும், லோகேஸ்வரன் (தொழிலபதிபர்), லதாவாணி (ஆசிரியர், யா/ இராமநாதன் கல்லூரி) சிவாஜினி (ஆசிரியர், யா/ மயிலிட்டி கலைமகள் ம.வி), சிவலோஜினி (ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம் கிளி. தெற்கு) வதனி (ஆசிரியர், யா/ இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடமாகாணம்), இளங்கோ (அதிபர், யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி), ஸ்ரீ ஸ்கந்தராசா (லண்டன்), கமலராஜன் (வலயக்கல்விப் பணிப்பாளர், கிளி தெற்கு கல்வி வலயம்), காலஞ்சென்ற Dr. ரகுபதி (பொது வைத்திய நிபுணர், தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகி யோரின் மைத்துனியும், டிலோசன் (மாணவன், யாழ், இந்துக் கல்லூரி), பிரியந்தன் (மாணவன், யாழ் இந்துக்கல்லூரி), ஹாரிணி (மாணவி, யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), அபிநயன் (உற்பத்தி முகாமையாளர், Hemsons), ஆரதி (மாணவி, யாழ். மருத்துவபீடம்), இளங்கீதன் (மாணவன், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மருத்துவபீடம்), மிகுந்தன், அகர்சை, கோவர்த்தனன் (மாணவன், யாழ் இந்துக்கல்லூரி), திருவகன் (மாண வன், யாழ் இந்துக்கல்லூரி) ஜதுகுலன் (மாணவன்/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


கோவில் வாசல்,
இணுவில்

தகவல்:
குடும்பத்தினர்

(CS 42284) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திரு. சொக்கலிங்கம் ஜீவகாந்தன்

(நாரந்தனை)

யாழ். நாரந்தனை கந்தசுவாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நெய்வேலி இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் ஜீவகாந்தன் (ஜீவா) அவர்கள் கடந்த (19.04.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கலிங்கம் மற்றும் பராசக்தி (பிரித்தானியா) தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான மணி - சண்முகலக்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், நாகஜோதி (இந்தியா) அவர்களின் அன்புக் கணவரும், இனியன் (பொறியியலாளர்) அவர்களின் பாசமிகு தந்தையும் சாந்தாதேவி (முன்னாள் ஆசிரிய ஆலோசகர், புளுமெண்டா வித்தியாலயம் கொழும்பு-13) காலஞ்சென்றவர்களான சேதுராமன், புஸ்பராஜா மற்றும் ஜெயந்தா, சிவபாலன், தீபகாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பாக்கியநாதன் (முன்னாள் உத்தியோகத்தர் தொலைத் தொடர்பு திணைக்களம், யாழ்ப்பாணம்), ஞானனேஸ்வரி, குமரகௌரி, விஜேந்திரன், குணஜா, ஜெயந்தி, ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பிறேமஜா (டயானா), அபிசாந் ஆகியோரின் தாய் மாமாவும் சுகஸ்தன், விசாகன், கேர்ஸ்ரின், அருணா ஆகியோரின் பாசமிகு மாமாவும், அருள்பிரகாஷ், ஹரிபிரசாந், அஸ்வினி, சாரங்கி, சௌமிகாந், சாரங்கன், கௌரி சாந், மிதுஷா, ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், ஹஜானி, சாதனா, அனோஜ், ஆகியோரின் அன்பு பெரியதந்தையும், ஷிவானி, ஷிவோன் ஆகியோ-ரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் மனோன்மணி, நகுலாம்பிகை சண்முகம், பொன்மணி, சண்முகராஜா, தங்கலெட்சுமி சபாரட்ணம், சிந்தாமணி தம்பையா, மங்கையர்கரசி மற்றும் குமாரசாமி, சகுந்தலாதேவி சண்முகராஜன், ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், கிருஸ்ண பாலா மற்றும் சிவகாமன் ரூபாவதி ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர் களான இராசையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், காலஞ் சென்றவர்களான அன்னலெட்சுமி (கண்ணம்மா), சொர்ணம்மா மற்றும் கமலம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெய் வேலி (இந்தியா) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்-தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பிறப்பு 09.05.1963 | இறப்பு 19.04.2022

82/ 22, செட்டித்தெரு,
நல்லூர்.


தகவல்:
குடும்பத்தினர்

(CS 19466) (3/6)

# மரண அறிவித்தல்

## சிவதிரு சரவணமுத்து குணராஜா

(முன்னாள் கிராமசபை அங்கத்தவர் - மண்டைதீவு)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் ஒழுங்கை கலாசாலை வீதி, திருநெல்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து குணராஜா கடந்த (22.04.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - சிவக்கொழுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, வேலாயுதபிள்ளை, கணபதிப்பிள்ளை மற்றும் திலகவதி, மகாராசா, மாணிக்கவாசகர், திருநாவுக்கரசு, காலஞ்சென்றவர்களான உருத்திரா தேவி, இராசநாயகம் மற்றும் வீரலெட்சுமி, காலஞ்சென்றவர்களான திருஞானசம்மந்தமூர்த்தி, தெய்வநாயகி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், கலாவதி, இளந்திரயன். இளமுகிலன், கலாநிதி, இளறஞ்சிதன் ஆகியோரின் பெரிய தந்தையும், சுபாஜினி, கிருபதாரணி, கிருபாகரன், தனுஷ்யா, பவிதர்சன், தக்சிகா, சர்மியா, திபானி, திபேக்கா, நிருஜன், ஜெனுசன், சோபியா, சிவாயினி, பர்வதி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரபி, கானவி, ரிதன், வர்ணவி, வாசவி, அதியன், சர்வஜா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.04.2022) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்ணில் 05.05.1931 | விண்ணில் 22.04.2022

தொடர்பு:
077 359 8457

தகவல்:
செல்லையா திருநாவுக்கரசு
குடும்பத்தினர்

(CR 8306) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புப் பேராயரைச் சந்திக்க காத்திருக்கும் பிரசன்ன ரணதுங்க

**கொழும்பு, ஏப்.24**
**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன் என்று அரசாங்கத்தின் பிரதம அமைப்பாளரும் பொதுப்பாதுகாப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்**

நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான ஏதேனும் சந்தேகங்கள் நிவர்த்தி செய்யப்படும் வகையில், அவரையும், ஏனைய ஆயர்களையும், அருட்தந்தையர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு நாம் தயார் என்பதை கர்தினாலுக்கு எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளேன். தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்காகவே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகப் பொய்யான குற்றச்சாட்டு முன்வைக்கப் படுகின்றது. இது நிறுத்தப்படவேண்டும். உளவுத்துறை அதிகாரிகள் மீது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசாங்கம் கவலையடைகின்றது - என்றார். (எ-இ)


ஈர விழிகளில் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21 . 07 . 1947

மறைவு 04 . 05 . 2021



அமரர் திரு.
கந்தையா அன்னலிங்கம்

அன்பின் உருவமாய்
அரவணைப்பின் சிகரமாய்
எம்மை வழி நடத்திய
எம் இதயத்தின் திருவிளக்கே...!
ஓராண்டு கடந்து
வருடங்கள் உருண்டாலும்
வலியின் வாசம் மட்டும்
விழிகருவில் வடுபோல்
விலகாமல் உள்ளதே
காலமெல்லாம் கண்ணீரில்
மிதக்கவிட்டு போனதேனோ...?
வாழ்ந்தவை யாவும் நினைவாகி
நீங்கள் மறைந்தது மட்டும்
கனவாகிப் போகாதா?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்கள் தூவி
உங்களையே எண்ணி வாடுகிறோம்
அணையாத தீபம் போல
உங்கள் சுடர் என்றும்
எம்மை வாழ வைக்கும்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

புலவனார் வீதி, கல்வியங்காடு — குடும்பத்தினர்

(CS 19463)(36)


# பயனாளர்களுக்கு நாற்று வழங்கல்


சாவகச்சேரி, ஏப். 24
தென்மராட்சிப் பிரதேசத்தில் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 156 பயனாளர்களுக்கு வீட்டுத் தோட்டத்துக்கான நாற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.
பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினரும் சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினரும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். இதற்பமைய ஒவ்வொரு பயனாளர்களுக்கும் கத்தரி, கறிமிளகாய், தக்காளி, மிளகாய் ஆகிய நாற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் நாற்றுக்களுக்கான பொலித்தீன் உறைகளை அபிவிருத்திக் கழகத்தினர் வழங்கியுள்ளனர்.
மேலும் கீரை வகைகளை உற்பத்தி செய்வதற்கு சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக விதைகளை வழங்கி வருகின்றனர். (ம-14,9)

# இளைஞர் நாடாளுமன்றத்தினர் பங்களாதேஷ் தூதுவருடன் பேச்சு

கொழும்பு, ஏப். 24
இளைஞர் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார மற்றும் இராஜதந்திர உறவுகளின் பிரதி அமைச்சர் அஹ்மத் ஸாதிக், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முப்தி ஆகியோர் பங்களாதேஷ் தூதுவர் தாரிக் ஆரிபுல் இஸ்லாமுடன் பங்களாதேஷ் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.
இந்தச் சந்திப்பில், இலங்கையின் கல்வி, விளையாட்டு, வெளிவிவகாரம் மற்றும் சுற்றுலாத்துறை போன்றவற்றில் இளைஞர்களின் பங்களிப்பு தொடர்பாகவும் மேலும் அதில் உள்ள குறைகள் தொடர்பாகவும், இந்தத் துறைகளில் பங்களாதேஷ் நாட்டின் இளைஞர்களின் பங்களிப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (எ-இ)



இலங்கையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பு காலிமுகத்திடலில் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. காலிமுகத் திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆயிரக் கணக்கானவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றியும் கைபேசி ஒளிகளை ஒளிரச் செய்தும் அஞ்சலியில் பங்கேற்றனர். (எ-இ)



# மாலை மற்றும் இரவில் மழைக்குச் சாத்தியம்!

கொழும்பு, ஏப். 24
நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.
மேல் மற்றும் தென் மாகாணங்களில் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
மேல், மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.
அதேவேளை கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 35-40 கிலோமீற்றர்வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (எ-இ)

# காலிமுகத்திடலில் போராடுவோரை சபாநாயகர் சந்திக்கவேண்டும்

## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்

காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்கள் சிறந்த மாற்றத்தை உண்மைத் தன்மையுடன் எதிர்பார்க்கிறார்கள் இளைஞர்களின் போராட்டத்தை அரசியல் கட்சிகள் தங்களின் அரசியல் தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார்கள். ஆகவே நாடாளுமன்றில் நடுநிலையான தரப்பினர் என்ற ரீதியில் சபாநாயகர் இளைஞர்களுடன் பேச்சை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச சபையில் வலியுறுத்தினார்.
நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அரசமைப்புத் திருத்தம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்துள்ள யோசனை வரவேற்கத்தக்கது. ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடனத்துக்கமைய அரசமைப்புத் திருத்தம் மற்றும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் சாதகமான முறையில் அவதானம் செலுத்தியுள்ளார். நாட்டில் பெரும்பாலான தலைவர்கள் இந்தவிடயம் தொடர்பில் கருத்துரைத்த போதும் எவரும் அவற்றைச் செயற்படுத்தவில்லை.
[illegible] இளைஞர்கள் உண்மையான நோக்கில் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஒரு தரப்பினர் அந்தப் போராட்டத்தை அரசியல் தேவைக்குப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார்கள்.
காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடும் தரப்பினரை சபாநாயகர் சந்திக்கவேண்டும். அரசியல் கட்சிகள் இளைஞர்களின் போராட்டத்தை உரிமை கொண்டாட இடமளிக்க முடியாது -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 99 ஓட்டங்கள் வித்தியாசத்தில்

# சென். ஜோன்ஸ் வெற்றிவாகை

யாழ்ப்பாணம், ஏப். 24

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையிலான 115ஆவது வடக்கின் பெரும் போர் துடுப்பாட்டப்போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 99 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி 84.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் கரிசன் 41 ஓட்டங்களையும் அணித்தலைவர் அபிசேக் 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் விதுர்சன் மற்றும் கவிதர்சன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 45 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய கல்லூரி சார்பில் சாரங்கன் 41 ஓட்டங்களையும், நிசாந்தன் 28ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர். பந்துவீச்சில் சென் ஜோன்ஸ் கல்லூரி சார்பில் விதுசன் 6 விக்கெட்டுகளையும், அசாந் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

42 ஓட்டங்கள் முன்னிலையோடு இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 67 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 220 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் சபேசன் 105, ஜெபனேசர் 35, சுகீதன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் நியூட்டன் 3 விக்கெட்டுக்களையும், கௌதம் 2விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.



ஐ. சிவசாந்தன்




262 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி 62.3 ஓவர்களில் 163 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. மத்திய கல்லூரி சார்பில் துடுப்பாட்டத்தில் கஜன் 53 ஓட்டங்களையும், சாரங்கன் 33 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி சார்பில் அசாந் 6 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சதத்தினை பூர்த்தி செய்த சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் சபேசன் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர் அசாந் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த களத்தடுப்பாளராக மத்திய கல்லூரி வீரர் சன்சயன் தெரிவுசெய்யப்பட்டார்.

போட்டியின் சகலதுறை ஆட்டக்காரனாக மத்திய கல்லூரி வீரர் கஜன் தெரிவுசெய்யப்பட்டார்.

சிறந்த விக்கெட் காப்பாளராக மத்திய கல்லூரி வீரர் சாரங்கன் தெரிவு செய்யப்பட்டார். (ஒ-இ)



தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அம்பலாங்கொட நகரில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டார். ரம்புக்கனையில் துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட குடும்பஸ்தரின் சாவுக்கு நீதி வேண்டி அவர் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

## பால்மா விலை அதிகரிக்கும்

பால்மா விலை அதிகரிப்பு எதிர்வரும் வாரத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு சரிவு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பால் மாக்களும் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. கடந்த இரண்டு வாரங்களாக புதிய பங்குகள் இறக்குமதி செய்யப்படவில்லை என இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

அடுத்த வார இறுதிக்குள் பால் மா இறக்குமதி செய்யப்படவுள்ளது. பால் மா நாட்டுக்கு வந்தவுடன், டொலரின் மதிப்பைக் கருத்தில் கொண்டு விலையை அதிகரிப்பதாக இறக்குமதியாளர்கள் உறுதிப்படுத்தினர். (ஒ-இ)

# ராஜபக்சக்களுடன் இணைந்து ஒருபோதும் ஆட்சியமைக்கேன்

## சஜித் திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 24

நாடு வீழ்ந்துள்ள நிலையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்கத் தயாராக இருக்கின்றேன். நாட்டில் மேல் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தியாகும். எனக்கு உலகை ஆளும் பேரரசர் ஆட்சிப் பதவியை வழங்குவதாக உறுதியளித்தாலும் கள்வர் கும்பலோ அல்லது ராஜபக்சக்களுடன் இணைந்தோ இடைக்கால அரசை அமைக்கமாட்டேன். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொடுங்கோல் அரசின் அடக்குமுறை சார்ந்த மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று கொலன்ன தேர்தல் தொகுதியின் எம்பிலிப்பிட்டிய நகரில் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் கொலன்ன தேர்தல் தொகுதியின் அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹேசா விதானகே ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் 150 ஆசனங்களுடன் இரண்டரை வருடங்களாக மரணப்படுக்கையில் இருந்த அரசு, இப்போது கூட்டணி ஆட்சிக்கு வாருங்கள் என்கிறார்கள். வந்து பிரதமர் பதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார்கள். வந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்கிறார்கள். ஆனால், யாருடைய மனதையும் கெடுக்கும் நோக்கில் திருட்டு அரசை அமைக்க நாங்கள் தயாராக இல்லை. மக்கள் மூலம் ஆட்சி அமைக்கவே நாங்கள் தயாராகவுள்ளோம்.

ராஜபக்சக்களுடன் ஒரு டீலை மேற்கொள்வதை விட வீட்டுக்குச் செல்வது எனக்குச் சுகம். இரண்டரை வருடங்களாக நாட்டை குட்டிச்சுவராக்கி, நாட்டையே அழித்துவிட்டு இப்போது பொய் இறக்கைகளை அணிவிக்க வருகிறார்கள். அந்த இறக்கைகளை அணிய நாங்கள் தயாரில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி சமூக ஜனநாயக கொள்கைசார் வேலைத்திட்டத்தையே நடைமுறைப்படுத்துகின்றது. இது தீவிர தாராள்வாதத்தையோ அல்லது உச்ச முதலாளித்துவத்தையோ அல்ல - என்றார். (ஒ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவத் தயார் ஐ.எம்.எவ். நேற்று அறிவிப்பு

**கொழும்பு, ஏப். 24**

**இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எவ்.) ஆதரவளிக்கும் என்று நேற்று அதன் இலங்கைத் தூதரகத் தலைவர் மசாஹிரோ நோசாக்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

வொஷிங்டனில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்த கால கூட்டத்தின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் மற்ற மூத்த உறுப்பினர்கள், நிதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையிலான இலங்கை தூதுக்குழுவை சந்தித்தனர்.

நந்தலால் வீரசிங்க, பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான கொள்கை நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார். இலங்கைக்கான சர்வதேச நாணய நிதிய குழு, தூதுக்குழுவுடன் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு வேலைத்திட்டம் பற்றிய ஆரம்ப தொழில்நுட்ப கலந்துரையாடல்களை நடத்தியது.

இது தொடர்பில் இலங்கைக்கான தூதரகத் தலைவர் மசாஹிரோ நோசாக்கி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'ஏப்ரல் 18ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை, இலங்கை பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச நாணய நிதியக் குழு, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு திட்டத்துக்கான அதிகாரிகளின் கோரிக்கை குறித்து பயனுள்ள தொழில்நுட்ப விவாதங்களை நடத்தியது.

இலங்கையின் அண்மைய பொருளாதார மற்றும் நிதி அபிவிருத்திகள், பொருளாதார உறுதிப்பாட்டை மீட்டெடுப்பதற்கு நம்பகமான மற்றும் ஒத்திசைவான மூலோபாயத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பாதகமான பாதிப்பை ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்குத் தணிக்க வலுவான சமூக பாதுகாப்பு வலைகளின் முக்கியத்துவம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

சர்வதேச நாணய நிதியக் குழு அதிகாரிகள் தங்கள் கடனாளிகளுடன் கூட்டு உரையாடலில் ஈடுபடும் திட்டத்தை வரவேற்றனர்.

'முன்னோக்கிச் செல்லும்போது, தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு சர்வதேச நாணய நிதியக் குழு ஆதரவளிக்கும், அவர்களின் பொருளாதார வேலைத்திட்டத்தில் அதிகாரிகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலமும், நெருக்கடிக்கு சரியான நேரத்தில் தீர்வு காண்பதற்கு ஆதரவாக மற்ற அனைத்து பங்குதாரர்களுடன் ஈடுபடுவதன் மூலமும் இந்த ஆதரவு வழங்கப்படும்' - என்றுள்ளது. (ஒ-இ)

## இடைக்கால...

புதிய பிரதமர் ஒருவர் தலைமையில் சர்வகட்சி இடைக்கால அரசமைப்பதற்காக, பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலக வேண்டும் என மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியுள்ளனர். நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் அணிகளின் கூட்டு கோரிக்கையும் இதுவாகவே இருக்கின்றது. ஆளுங்கட்சியின் மூத்த உறுப்பினரான முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திலும், 'பிரதமர் பதவி விலக வேண்டும்' என்ற விடயத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், பிரதமர் பதவியில் இருந்து விலகுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனரே என்று மஹிந்தவிடம் கொழும்பு சிங்கள ஊடகமான நெத் வானொலியின் ஊடகர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த மஹிந்த ராஜபக்ச, பெரும்பான்மையானவர்கள் அவ்வாறு கோரவில்லை. அரசியல் மற்றும் கட்சி வரலாறு தெரியாத ஒரு சிலர் அவ்வாறு கூறி வரலாம். என்னிடம் இது பற்றி எவரும் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவிக்கவும் மாட்டார்கள் என்றே நம்புகின்றேன் - என்றார்.

'நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில், சர்வகட்சி இடைக்கால அரசமைக்க பிரதமர் உள்ளடங்கலான அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாரே' என எழுப்பட்ட கேள்விக்கு,

'என்ன இடைக்கால அரசு? இணக்கப்பாடின்றி அதனை எப்படிச் செய்வது? இடைக்கால அரசை உருவாக்குவதாக இருந்தாலும் அதனை எனது தலைமையிலேயே மேற்கொள்ளவேண்டும். புதிய பிரதமர் தலைமையில் அமையும் நடவடிக்கையை எவரும் ஆதரிக்கமாட்டார்கள் என்றே நம்புகின்றேன்' என்று பதிலளித்தார் பிரதமர் மஹிந்த.

அதேவேளை, காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் ஆளுங்கட்சியுடன் பேச்சு நடத்த முன்வரவேண்டும். அப்போதுதான் தீர்வைத் தேடலாம். பேச்சுக்கு வராவிட்டால் போராட்டத்தை தொடரவேண்டித்தான் வரும். போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்த அலரிமாளிகை கதவு திறந்தே உள்ளது. தேவையான தரப்புகளுடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்து கொடுக்க நான் தயார், எனவும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை- பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதாக நேற்றுக்காலை தகவல் பரவியது. அந்தத் தகவலையும் பிரதமர் மறுத்துள்ளார். (அ-ஒ-இ)

## பல்கலை...

ஒருவர் தங்குமிடத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளரானெப் பொலிஸார் கூறுகின்றனர்.

பளைப் பகுதியைச் சேர்ந்த தனுஜா (வயது - 24) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்து பல்கலைக்கழகம் செல்வதாகக் கூறி யாழ்ப்பாணம் வந்த மாணவி, தனது அறையை உட்பக்கமாகப் பூட்டிவிட்டு தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். மாணவியைக் காணவில்லை என்று தங்குமிடத்தில் உள்ள ஏனைய மாணவர்கள் தேடினர். இதன்போது மாணவியின் அறைக் கதவு பூட்டப்பட்டிருந்த நிலையில் உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ஒ-125)

## தூதுவர்களுடன்...

மன்ற உறுப்பினர்கள் குழு எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பது குறித்து கவனம் செலுத்தியுள்ள அதேவேளை, வெளிநாட்டு தூதுவர்களையும் சந்தித்துள்ளனர்

ரஷ்யத் தூதுவரை கடந்த வியாழன் அன்றும், சீனத் தூதுவரை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமையும் சந்தித்து சுயாதீன அணி சந்தித்துள்ளது. இடைக்கால அரசு அமைந்தால், பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ-ஒ-இ)

## கோத்தாவை...

முயற்சிக்க வேண்டாம் என நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் பயணிக்கும் கப்பல் திடீரென நடுக்கடலில் புயலில் அகப்பட்டுக்கொண்டுள்ளது. நீங்கள் அந்தக் கப்பலின் கப்டனுடன் கோபம் என்றால் உடனே அந்தக் கப்பலை மூழ்கடிப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். அவ்வாறு செய்தால் நாமும் நீரில் மூழ்கி இறந்துவிடுவோம். கப்பலில் பயணிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து மெதுவாக அந்தக் கப்பலைப் பாதுகாப்பாக கரைக்குக் கொண்டுவர வேண்டும். அதன் பிறகே கப்டனுடனான பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

இது போலவே தற்போது நமது நாட்டிலும் பிரச்சினை உருவெடுத்துள்ளது. ஜனாதிபதியுடன் பிரச்சினைகள் இருக்கலாம், கோபங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றைக் காட்ட வேண்டிய நேரம் இது வல்ல. இது பழிவாங்கும் நேரம் இல்லை. இப்போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நமது நாட்டை மீட்டெடுக்கப் போராடுவோம் - என்றார். (அ-ஒ-இ)

## குடிதண்ணீர்...

களை இலங்கை வரவேற்பதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் நடைபெற்ற 4 ஆவது ஆசிய - பசுபிக் நீர் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி கோத்தாபய கலந்துகொண்டு உரையாற்றினார். 48 நாடுகளின் பங்குப்பற்றலுடன் இடம்பெற்ற இந்த மாநாட்டில், ஜனாதிபதி காணொலி தொழில்நுட்பம் வழியாகக் கலந்துகொண்டார். (அ-ஒ-இ)

## போராட்டத்துக்கு...

சேதம் விளைவிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக எதிர்ப்பில் ஈடுபட்டுள்ள 16 பேரின் பெயர்களைக் குறிப்பிட்டு கொழும்பு - கோட்டை பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிரானவர்கள் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையில் ஏதேனும் முறுகல் நிலை ஏற்படும் சாத்தியமுள்ளதாக மன்றில் சுட்டிக்காட்டிய கோட்டை பொலிஸார், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் 16 பேருக்கும் ஏற்ற உத்தரவை பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வன்முறையோ, பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் சம்பவங்களோ இடம்பெறுவதற்கு முன்னர், உத்தரவு பிறப்பிப்பதற்கான இயலுமை இல்லையென தெரிவித்த மேலதிக நீதிவான், சட்டவிரோதமான நடவடிக்கைகள் ஏதேனும் இடம்பெற்றால், பொலிஸ் கட்டளைச் சட்டத்துக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு உள்ளதென தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் உரிமைக்காக முன்னிலையாவதற்காக அதிகளவான சட்டத்தரணிகள் நீதிமன்ற வளாகத்துக்கு வருகை தந்திருந்தனர். (அ-ஒ-இ)

## மருந்துத்...

இந்தோனேஷிய மற்றும் தாய்லாந்து அரசுகளிடமிருந்து தலா 340 மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் ஒரு வாரத்துக்குள் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்படவுள்ளன.

சிங்கப்பூர் செஞ்சிலுவை சங்கத்தின் ஊடாக ஒரு லட்சம் அமெரிக்க டொலர் மருந்துப் பொருள்கள் கொள்வனவுக்காக வழங்கப்படவுள்ளன.

உலக சுகாதார நிறுவனத்தால் 1.37 மில்லியன் டொலர் பெறுமதியான மருத்துவ உதவிகள் அடுத்த மாதமளவில் கிடைக்கப் பெறவுள்ளது.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இணைந்து மருந்துப் பொருள்கள் கொள்வனவுக்காக 30 மில்லியன் டொலரை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன. (ஒ-இ)

## யாழ். நகரில்...

தாவடிப் பகுதியைச் சேர்ந்த கமல்ராஜ் (வயது - 23) எனும் இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கட்டடத்தின் பின்பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. (அ-ஒ-10)

## யாழ். போதனாவிலும்...

மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 73 அத்தியாவசிய மருந்துகள், அறுவை சிகிச்சைக்குத் தேவையான 13 மருந்துகள், அவசரமாக தேவைப்படும் 53 வீதமான மருந்துகள் மற்றும் ஆய்வு கூடத்துக்கு தேவையான 6 மருந்துகள் என்பன இல்லாது உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

## அமெரிக்கத்...

பயணத்தின்போது அரசியல் மற்றும் சிவில் சமூகத்தினரை அவர் சந்திக்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சந்தேகநபர்...*
திணைக்களத்தினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
28 வயதான சந்தேகநபர் கேகாலை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணைகளில் அவரை விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டபோதும், சந்தேகநபரை பிணையெடுக்க யாரும் முன்வராததால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
மேற்படி சந்தேகநபர் நேற்றுக் காலை கடத்தப்பட்டுள்ளாரெனத் தகவல்கள் வெளிவந்தபோதும், அவரைத் தாம் கைது செய்திருப்பதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பின்னர் தெரியப்படுத்தியிருந்தது. (அ-ஒ-இ)

*மேலும்...*
ரத்வத்தே மற்றும் பியல் நிசாந்த டி சில்வா இருவரும் முன்னைய இராஜாங்க அமைச்சுப் பதவிகளில் தொடரவுள்ளனர். (அ-ஒ-இ)

*வான் பாய்கிறது...*
கீழ்ப்பகுதியில் வாழுகின்ற மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு கோரியுள்ளது. (அ-ஒ-113)

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையத்திற்கு பெண் விற்பனையாளர் தேவை.
❖விற்பனைத்துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
❖முழு நேர, பகுதி நேர வேலை வாய்ப்பு உண்டு. (CS 18892) (4/6)
தொடர்புகளுக்கு:-076 888 0808

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஓட்டுமடச்சந்தியிலிருந்து முதலாம் ஒழுங்கை பகுதியில் 12 அடிப்பாதையுடன் 04 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
(இரண்டு பரப்புகளாகவும் பிரித்து கொடுக்கப்படும்)
**பார்வையிடும் நேரம்:- 8.00AM-6.00PM**
**(ஒரு பரப்பின் விலை:- 8 லட்சம்)** (CS 19482) (4/6)
தொடர்பு : 076 844 6536

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியிலிருந்து 2ஆம் காணி 60 பரப்பு 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு. (யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6Km தூரம், ஒரு பரப்பின் விலை 5 லட்சம்,
18 அடிப்பாதையுடன் நல்ல சூழல், நன்னீரூற்று) (4/6)
தொடர்பு:- 074 291 3725, 074 291 3726, 074 291 3727

## வேலைவாய்ப்பு

சாவகச்சேரியில் உள்ள பிரபல நிறுவனமொன்றுக்கு முகாமையாளர் மற்றும் விற்பனை பிரதிநிதிகள் தேவை. (CS 19477) (4/6)
071 415 0995

## வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ் நல்லூர் பகுதியில் குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் வீட்டுப்பணிப்பெண் தேவை.
(CS 19480) (4/6) 077 191 9859

## ENGLISH CLASSES

யாழ்நகரில் தனி வகுப்புகள்
Grade 7 - G.C.E. O/L - A/L
Graduates தொழில்புரிவோர் - சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும்
GCE O/L English Literature
K.Ganesh B.A 077 766 8725

## வேலை வாய்ப்பு

வவுனியாவில் உள்ள எமது ஸ்தாபனத்திற்கு கோவில் அபிஷேகப் பொருட்கள் மருந்து சரக்கு வகைகள் தெரிந்தவர்கள் தேவை.
(CR 37887) (3/6) 077 711 1831

## வீடு வாடகைக்கு

தபால் பெட்டிச் சந்திக்கு அருகில் அலுவலகப் பயன்பாட்டுக்கு உரிய பெரிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. (CS 19407) (4/6)
தொடர்புக்கு:- 077 968 6050

## வேலையாள் தேவை

யாழ். நகரப்பகுதியில் வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்வதற்கு பொருத்தமான வேலையாள் ஒருவர் தேவை. (ஆண் / பெண் இருபாலாரும்)
(CS 19468) (3/6) 077 803 8739

## ஆசிரியர்கள் ஒத்துமாறல்

மன்னார் நகரத்திலுள்ள பிரபல்யமான தேசிய பாடசாலையொன்றில் பௌதிகவியல் ஆசிரியராக பணிபுரியும் நான் யாழ். மாவட்டத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றேன். (CS 19435) (4/6)
தொடர்புக்கு:- 077 795 9991

## வீடு நாள் வாடகைக்கு

வெளிநாடுகளிலிருந்து குடும்பமாக வருவோர் தங்குவதற்கு ஏற்ற சகல வசதிகளையும் கொண்ட வீடு யாழ். நகரில் நாள் வாடகைக்கு கொடுக்கப்படும்.
(CS 19471) (3/6) 077 633 3000

## விற்பனைக்கு

❖கொடிகாமத்தில் A9 வீதியோரமாக 50 பரப்புக் காணி விற்பனைக்கு.
❖சுதுமலையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு. (CS 44224) (4/6)
Divakar Thavavinayagan 077 221 6683

## மின்சாரம் துண்டித்து விட்டதா?
## இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்.

மின்சாரம் இருக்கும் போது பற்றி சார்ஜர் மூலம் மின்சாரம் சேமித்து மின்சாரம் இல்லாத நேரத்தில் சேமித்து வைத்த மின்சாரத்தை பற்றி மூலம் 12V 220V INVERTER மின்சாரம் பயன்படுத்த முடியும். 10 மணித்தியாலம் LIGHT, FAN, TV , RADIO, CCTV CAMERA மின்சாரப் பொருள்கள் பாவிக்க முடியும்.
J.J GROUP No:603, K.K.S.Road Jaffna.
(CS 19475) (4/6) 021 222 8854, 077 555 5100

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல தனியார் விருந்தினர் விடுதிக்கு சமையல் உதவியாளர் (Kitchen helper) மற்றும் Waiters ஆகிய வேலைகளுக்கு ஆள்கள் தேவை
(CS 19457) (3/6) 074 175 4727

## பணிநிலை வெற்றிடம்

பிரபல காப்புறுதிக் கம்பனியில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு மாதாந்த சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
**விண்ணப்ப இறுதித்திகதி : 30.04.2022**
**விளம்பர இல : JF/1037**
**மே/பா. உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (CS 19258) (3/6)

## வேலைவாய்ப்பு

Receptionist - பெண் - 01
House Keeping - பெண் - 01
நல்லூரில் இயங்கும் சுற்றுலா விடுதிக்கு
சம்பளம் - 20,000, 30,000 (cs 44286) (2.6)
தொடர்பு: 077 248 7642

## ஜெனறேற்றர் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள Cummins (USA) 55 Kva, Airman (Japan ) 25Kva ஜெனறேற்றர்கள் உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 074 175 4727 (CS 19460) (3/6)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு கீழ்வரும் வேலைகளிற்கு வேலையாள்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.
*Computer Billing (Boys &Girls)
*தங்கி நின்று வேலை செய்வதற்கு (ஆண்கள் மட்டும்)
*கனரக வாகன சாரதி
*பகுதி நேர வேலையாள்கள் (ஆண்கள் மட்டும்)
(4.00 P.m - 9.00 P.m (cs 44281) (2.6)
077 419 5015

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ் நகர் பகுதியில் புதிதாக ஆரம்பித்திருக்கும் Burger Hut ஒன்றிற்கு வேலையாள்கள் (ஆண்/ பெண்) தேவை.
(CS 19388) (3/6) தொடர்பு : 077 725 1036

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடனடியாக வாடகைக்குத் தேவை. (CS 44277) (4/6)
தொடர்புக்கு:- 077 905 0420

## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்நகர் மத்தியில் இயங்கும் பிரபல அழகுசாதன பொருட்கள் விற்பனை செய்யும் நிலையத்திற்கு வேலையாள்கள் (பெண்கள்) தேவை.
(CS 19389) (3/6) தொடர்பு : 077 725 1036

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.
(CS 19348) (3/6) 077 309 0624

## பெண் வேலையாள்கள் தேவை

யாழ். நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் இயங்கும் தளபாட விற்பனை நிலையம் ஒன்றிக்கு காசாளர் பெண் வேலையாள் தேவை.
S.P.Furniture (CS 19470) (3/6) 077 181 2219

## வேலை வாய்ப்பு

பிரபல மருந்து பொருட்கள் வினியோகிக்கும் நிறுவனத்திற்கு
Billing Accounts Clerk (பெண்)
Store Keeper (ஆண்) உடன் தேவை.
தாமதமின்றி தொடர்பு கொள்ளவும்
(CS 19472) (3/6) 077 348 4837

## சுயத்தொழில் வாய்ப்பு...!

குறைந்த முதலீடு, அதிக இலாபம்..!
ரூபா.50,000/- க்கு மேல் மாத வருமானம் பெற
WINRICH




தமிழில் தொடர்புகொள்ள 077 - 391 88 70 WINRICH INTERNATIONAL (PVT) LTD Colombo 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 08

வருத்தவளை வேய்அரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில் தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாம்திரிந்து
தாழுமவர் தம்அடிக்கீழ்த் தான். **ஔவையார்**

# சஞ்சீவி

மலை 33: | வள்ளுவர் ஆண்டு : 2053 | சித்திரை 11 | ஞாயிற்றுக்கிழமை (24.04.2022) | சிகரம் : 96



# தமிழ்க் கட்சிகளின் கவனத்துக்கு...!

○ நிலாந்தன்

புத்தாண்டு பிறந்த அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை . கிளிநொச்சிக்கு போகும்பொழுது எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களும் திறந்திருந்தன. சிறிய மற்றும் பெரிய வரிசைகளில் நின்று எரிபொருளை நிரப்பக் கூடியதாக இருந்தது. ஆனால் மதியமளவில் ஒரு செய்தி வெளிவந்தது. மோட்டார் சைக்கிளுக்கு ஆயிரம் ரூபா வரையிலும் மோட்டார் கார்களுக்கு 1500 ரூபா வரையிலும் தான் பெற்றோல் நிரப்பலாம் என்று அந்தச்செய்தி தெரிவித்தது. அதன்பின் பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டேன். கிளிநொச்சியில் தொடங்கி யாழ்ப்பாணம் வரையிலும் பெரும்பாலும் எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களும் ஒன்றில் மூடப்பட்டிருந்தன. அல்லது பெற்றோல் இல்லை என்ற அறிவிப்போடு காணப்பட்டன.

ஏன் அப்படி மூடினார்கள் ?ஒரே நாளில் ஒரே நேரத்தில் எல்லா எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் எப்படி பெற்றோல் தீர்ந்து போனது? சில நாட்களில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கலாம் என்பதை ஊகித்த முதலாளிகள் பெற்றோலைப் பதுக்கினார்கள் என்ற பொதுமக்களின் குற்றச்சாட்டு சரியா?

எரிவாயு சிலிண்டர்கள் விநியோகம் தொடர்பாகவும் அவ்வாறு குற்றச்சாட்டுக்கள் உண்டு.ஒரு குறிப்பிட்ட தொகுதியினர் எரிவாயு சிலிண்டர்களை எப்படியோ பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் நாள் முழுக்க வரிசையில் நிற்பவர்களிற் பலர் அவ்வாறான அதிர்ஷ்டசாலிகள் இல்லை. அதிலும் சிலர் எரிபொருளுக்காக காத்திருக்கும் பொழுது இறந்து போய்விட்டார்கள். வேறுசிலர் காத்திருந்த களைப்பில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்துகளின் கீழ் உறங்கி விடுகிறார்கள். சாரதிகள் பேருந்துகளை இயக்கும் போது அவற்றுக்குக் கீழே உறங்குபவர்களைக் கவனிப்பதில்லை. அதனால் சிலர் பேருந்துகளில் நசியுண்டு இறந்து போகிறார்கள். இவ்வாறாக இதுவரையிலும் இலங்கைத்தீவில் எரிபொருள், எரிவாயு வரிசைகளில் நின்று இறந்தவர்களின் தொகை ஒன்பதுக்கும் அதிகமாக இருக்கலாம் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மட்டும் மக்களை மிதிக்கவில்லை. வர்த்தகர்களும் மக்களை மிதிக்கிறார்கள் என்று மக்கள் குற்றம் சாட்டுகிறார்கள். சித்திராப் பௌர்ணமியையொட்டி திருநெல்வேலி சந்தையில் மரக்கறிகள் அகோர விலைக்கு விற்கப்படுகின்றன. ஒருகிலோ முருங்கைக்காய் 1,600 ரூபாவுக்கு மேல் போனது.

ஒரு பிடி கீரை 160 ரூபா வரை போனது. ஒருவர் பகிடியாகச் சொன்னார். "..ஆட்டு இறைச்சியும் 3000 ரூபா, பாகற்காயும் 3000 ரூபா" என்று. ஏன் இப்படி விலைகள் தாறுமாறாக இருக்கின்றன என்று கேட்டால் தம்புள்ளையில் இருந்து வாகனங்கள் வரவில்லை என்று கூறினார்கள். அப்படி என்றால் உள்ளூர் மரக்கறியின் விலையை தீர்மானிப்பது யார்?

"முட்டையின் விலை இப்பொழுது இறங்கி வருகிறது. ஏன் ?"என்று கேட்டேன். ஒரு கடைக்காரர் சொன்னார் "சாப்பாட்டுக் கடைகள் இயங்குவது குறைவு என்பதால் முட்டை நுகர்வு குறைந்து விட்டது. அதனால் தான் விலை இறங்கியது" என்று. ஆனால் அவர் கூறிய அளவுக்கு சாப்பாட்டுக் கடைகள் மூடப்படவில்லை. "முட்டை விலை இறங்கினாலும் கோழி இறைச்சியின் விலை இறங்கவில்லை. ஏன்?"என்று ஒரு இறைச்சிக் கடைக்காரரிடம் கேட்டேன். 'தெற்கிலிருந்து முட்டையைக் கொண்டு வருகிறார்கள், ஆனால் கோழியை கொண்டு வருவதில்லை' என்று அவர் சொன்னார். இப்படி எத்தனையோ காரணங்களைக் கூறுகிறார்கள். காரணங்கள் சரியாகவும் இருக்கலாம் அல்லது புனையப்பட்டவைகளாகவும் இருக்கலாம். ஆனால் விலைகள் மட்டும் எந்த ஒரு தர்க்கத்துக்குள்ளும் அகப்படாமல் ஏறிக்கொண்டே போகின்றன. வியாபாரிகள் வைத்ததே விலை என்று வந்துவிட்டது. அதைக் கட்டுப்படுத்த யாருமில்லை.

பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிரான சிங்கள மக்களின் ஆர்ப்பாட்டங்களின் விளைவாக அரசியல் நெருக்கடியும் யாப்பு நெருக்கடியும் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் நாடு அரசற்ற ஒரு நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. இந்த அரசற்ற நிலை காரணமாக விலைகளை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அருகருகே வாழும் அயலவர்கள் எரிவாயு வாங்கப் போகும்போது ஒருவர் மற்றவருக்குச் சொல்லாமல் ரகசியமாக போகிறார்கள். ஏனென்றால் அப்படிச் சொன்னால் அரிதாக கிடைக்கும் அந்தப்பொருளை நுகர்வதற்கு மற்றவரும் போட்டிக்கு வந்து விடுவார் என்பதே காரணம். ஒரு சமூகத்தின் கூட்டுணர்வையே சிதைக்கும் அளவுக்கு பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றனவா? கடந்த ஞாயிற்றுக்கிழமை 6 கட்சிகள் யாழ்.இளங்கலைஞர் மன்றத்தில் கூடிய பொழுது அதில் நான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். அதற்கு முன்னரும் எனது எழுத்திலும் பேச்சிலும் இதுபற்றி அதிகமாக குறிப்பிட்டிருக்கிறேன்.

'தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசம் என்று நம்புகிறார்கள். ஆனால் அவர்கள் தேசமாகத் திரட்சியாக இல்லை என்பதைத்தான் வியாபாரிகளின் நடவடிக்கைகள் உணர்த்துகின்றனவா? அரசாங்கம் ஒருபக்கம் மக்களை வதைக்கிறது என்றால் இன்னொரு பக்கம் வர்த்தகர்களும் வதைக்கிறார்களா? இந்த விடயத்தில் வர்த்தகர்களைத் தட்டிக் கேட்பது யார்? அரசியல் கட்சிகளுக்கு இதில் பொறுப்பு கிடையாதா? மக்கள் பிரதிநிதிகளாக இருப்பவர்கள், கட்சித் தலைவர்களாக இருப்பவர்கள், இந்த விடயத்தில் வர்த்தகர்களோடு கதைத்து பொதுமக்களின் கஷ்டத்தை ஒப்பீட்டளவில் குறைக்க முடியாதா? நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவது என்பது அதுதானே ?

அறிக்கை விட்டால் மட்டும் போதாது, நாடாளுமன்றத்தில் கூர்மையான உரைகளை நிகழ்த்தினால் மட்டும் போதாது, அதற்கும் அப்பால் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்பது நடைமுறையில் மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்பதே. எனவே தேசத் திரட்சியின் ஒரு கூறாக அமையும் வணிகர்களோடு இது தொடர்பில் ஏன் எந்த ஒரு அரசியல்வாதியும் உரையாடத் துணியவில்லை? ' என்று அந்தக்கூட்டத்தில் நான் கேள்வி எழுப்பினேன்.

மக்கள் பிரதிநிதிகளாக இருப்பது என்பது மக்களுக்கு தலைமை தாங்குவதுதான். மக்களுக்கு தலைமை தாங்குவது என்பது நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது. மக்களை அடுத்தகட்டத்துக்குத் தயார்படுத்துவது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு மக்களைத் தூண்டுவது. அதற்கு வேண்டிய கட்டமைப்புக்களை உருவாக்குவது. அதாவது மக்களை அமைப்பாக்குவது. திரள் ஆக்குவது.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பெரும்பாலான அரசியல்வாதிகள் இப்பொழுது மட்டுமல்ல இதற்கு முன்னரும் பெரும் தொற்று நோய் சூழலுக்குள் அவ்வாறு மக்களுக்கு தலைமை தாங்கவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதியை பெற்று நிவாரணம் வழங்கினால் மட்டும் போதாது.மக்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும்.வழிகாட்ட வேண்டும். அதுதான் தலைமைத்துவம் என்றெல்லாம் நான் கட்டுரைகளை எழுதினேன்.விக்னேஸ்வரன் ஒரு கேள்வி-பதில் அறிக்கையில் அது தொடர்பான சில அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.அதற்குமப்பால் மக்களை அமைப்பாக்கும் செயற்றிட்டம் எதுவும் அவரிடம் இருக்கவில்லை. இப்பொழுது பொருளாதார நெருக்கடி வந்திருக்கிறது. அரசாங்கத்தின் உரக்கொள்கை காரணமாக விவசாயம் பெரிய அளவில் வீழ்ச்சி அடைந்து விட்டது. இதனால் இன்னும் இரண்டு மாதங்களில் அரிசிக்கு தட்டுப்பாடு வரலாம் என்று எச்சரிக்கப்படுகிறது.அரசாங்கம் அரிசியை இந்தியாவிலிருந்தும் சீனாவிலிருந்தும் இறக்க முயற்சிக்கிறது.அரசாங்கம் அதைச் செய்யட்டும். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கும் அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் தமிழ் மக்கள் எப்படிப்பட்ட முன்னாயத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது குறித்து ஏன் வழிகாட்டக் கூடாது? நெருக்கடியான காலகட்டங்களில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி வழி காட்டுவதுதான் தலைமைத்துவம்.அப்படிப்பட்ட தலைவர்கள் எத்தனை பேர் தமிழ்த் தேசிய அரங்கில் இப்பொழுது உண்டு?

03

**வர்த்தகர்களைத் தட்டிக் கேட்பது யார்? அரசியல் கட்சிகளுக்கு இதில் பொறுப்பு கிடையாதா?**

**அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மட்டும் மக்களை மிதிக்கவில்லை. வர்த்தகர்களும் மக்களை மிதிக்கிறார்கள் ...**

**நியாயமற்ற விலை உயர்வு போன்ற விடயங்களில் வணிகர்கள் மீது செல்வாக்கைப் பிரயோகிக்கவல்ல பலமான தலைமைத்துவம் எதுவும் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

சஞ்சீவி
24 ஏப்ரல் 2022




# ஒற்றையாட்சியை பாதுகாக்கும் ஏற்பாடு

## வெளிநாட்டுத் தூதரகங்களும் தலையீடு?

○ அ.நிக்ஸன்

பொருளாதார நெருக்கடி. விலைவாசி உயர்வு போன்றவற்றால் பல பிரச்சினைகளை எதிர்கொண்ட பின்னரும்கூட சிங்கள அரசியல் கட்சிகள். இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் அக்கறை செலுத்தவில்லை.

மாறாக இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைத்தல் மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் புதுப்பித்தல் அல்லது 21 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளிலேயே கவனம் செலுத்துகின்றன.


2015 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியைக் கவிழ்த்து ரணில்-மைத்திரி அரசாங்கம் பதவியேற்ற பின்னரும்கூட, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சுக்களை விட. ஜெனிவா மனித உரிமைச் சபையில் இருந்து இலங்கையை எப்படிக் காப்பாற்றுவது? என்பதிலேயே கவனம் செலுத்தினர்.

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியைக் கவிழ்த்தால் மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்தலாமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் கூறியிருந்தது. கொழும்பில் இருந்த வெளிநாட்டுத் தூதரகங்களும் அவ்வாறுதான் பொதுமக்களுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களுக்குக் கூறியிருந்தன. இதனை நம்பி 2015 ஆம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி நடைபெற்ற தேர்தலில் வடக்கு. கிழக்குத் தமிழர்கள் அப்போது ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர்.

ஆனால் வெற்றிபெற்று ஆட்சியமைத்ததும். நடந்ததென்ன? பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ச குடும்பத்தைக் காப்பாற்றினார். மஹிந்த ராஜபக்ச, அவரது குடும்ப உறுப்பினர்கள்,அவருக்கு ஆதரவான அமைச்சர்கள் போன்றோர் மேற்கொண்ட ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற குற்றச்செயல்களை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு உரிய முறையில் விசாரணைகளை நடத்தவில்லை.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணையின் வீரியம் குறைக்கப்பட்டு போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் பற்றிய விசாரணைகள் எல்லாவற்றையுமே உள்ளகப் பொறிமுறைக்குள் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதாவது இனப்பிரச்சினை விவகாரத்தை இலங்கையின் உள்ளக விவகாரமாக மாற்றுவதிலேயே மைத்திரி ரணில் அரசு கவனம் செலுத்தியிருந்தது. 19 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதைத் தவிர மைத்திரி-ரணில் அரசாங்கம் எதனையுமே செய்யவில்லை.



மஹிந்த ராஜபக்சவின் ஆட்சி எதற்காகக் கவிழ்க்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற்றபபடாமல். இலங்கையின் இறைமை மற்றும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பை பாதுகாக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. மாறாக முப்பது ஆண்டுகால போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குரிய தீர்வை ஏற்படுத்துவதோ, அல்லது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குரிய நிதியைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டங்களோ எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை.

ஆகவே சிங்கள மக்கள் பாதிக்கப்படும்போது ஏற்படுத்தப்படும் ஆட்சி மாற்றங்களில் சிங்கள மக்களுக்குச் சாதகமான வேலைகள் தான் நடைபெறுமே தவிர, தமிழ் மக்கள் சார்ந்த எந்தவொரு நலன்களும் கவனிக்கப்படுவதில்லை என்பது இங்கே பட்டவர்த்தனம்.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுகளினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடுகின்றனர். கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகுமாறும் கோருகின்றனர். இந்தப் போராட்டங்களின்போது ஆரம்பத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் நியாயப்படுத்தி வீதிக்கு இறங்கிய சிங்கள மக்கள், பின்னர் அது பற்றி எதுவுமே பேசவில்லை. சிங்கள அரசியல் கட்சிகளின் பின்புலங்கள் எதுவுமேயின்றி வீதிக்கு இறங்கிப் போராடிய மக்கள், பின்னர் கொழும்பு காலிமுகத்திடலில் ஒன்றுகூடித் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதிப் பதவியில் இருந்துவிலகினால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்ற கோஷம் மாத்திரமே தற்போது போராட்டக்காரர்கள் முன்வைக்கும் வாதமாகும். ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் என்பன ராஜபக்ச அரசாங்கத்தில் அதிகரித்ததனாலேயே தற்போது அந்நியச் செலாவணிக் கையிருப்புக் குறை

> எரிபொருள் , அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வுப் பிரச்சினைகள் மாத்திரமே சிங்கள மக்களின் போராட்டத்தில் முன்வைக்கப்படுகின்றன. கோத்தாபய வீட்டுக்குச் சென்றுவிட்டால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்ற கருத்து ஏற்புடையதல்ல.

வடைந்து பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதாகச் சிங்கள அரசியல் கட்சிகள் சித்திரிக்கின்றன. நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களின்போதும் இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. சிங்கள, ஆங்கில ஊடகங்களும் இவ்வாறுதான் காண்பிக்கின்றன.

ஆனால் கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தினால் வடக்கு,கிழக்குத் தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் எதுவுமே சிங்கள அரசியல் கட்சிகளினாலோ அல்லது சிங்கள ஊடகங்களினாலோ முன்வைக்கப்படவேயில்லை. கோத்தாபயவினால் பாதிக்கப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்களின் பெயர்கள் இளம் ஊடகவியலாளர் அமைப்பின் பட்டியலில் உள்ளன. ஆனால் தமிழ் ஊடகவியலாளர்களின் பெயர்கள் எதுவுமே அந்தப் பட்டியலில் இல்லை. ஆகவே கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் பாதிக்கப்பட்டது சிங்கள மக்கள் மாத்திரமே என்ற தொனி கூடுதலாகச் சித்திரிக்கப்படுகின்றது. அவருடைய இரண்டு வருட ஆட்சியில் எற்பட்ட பிரச்சினைகள் மாத்திரமே பிரதானப்படுத்தப்படுகின்றன

கோத்தா பதவி விலகிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற கருத்துக்களை சிங்கள அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல, சிங்கள முற்போக்காளர்கள், சிங்கள இடதுசாரிகள் அனைவருமே முன்வைக்கின்றனர்.ஏனெனில் இலங்கை ஒற்றையாட்சியின் இறைமையைப் பாதுகாப்பது மாத்திரமே அவர்களின் நோக்கம். 2015 ஆம் ஆண்டு மஹிந்தவைக் கவிழ்த்ததைப் போன்று 2022 இல் கோத்தாபய ராஜபக்சவைக் கவிழ்த்துப் புதிய ஆட்சியைக் கொண்டுவந்தால், சர்வதேச அரங்கில் தற்போது பேசுபொருளாக இருக்கும் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் முற்றாகவே இல்லாமல் செய்துவிடலாமென சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள முற்போக்குவாதிகளும் நம்புகின்றனர். இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் மாற்றங்களைச் செய்து, தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் அதிகாரங்களை உறுதிப்படுத்தும் நிலையான தீர்வுக்குரிய எண்ணக் கருக்கள்ளைக் கோத்தாவுக்கு எதிராகத் தற்போது போராட்டத்தில் ஈடுபடும் சிங்கள மக்கள் கொண்டிருக்கவில்லை என்பதும் பட்டவர்த்தனம். எரிபொருள்கள் கிடைத்ததும் வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் வீட்டுக்குச் சென்றுவிடுவார்கள். இந்தப் போராட்டத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர்களும் இணைந்து பங்களிக்க வேண்டுமெனக் கூறுவோர் சிங்கள மக்களின் இந்த மன நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

போராட்டத்துக்குத் தமிழர்கள் ஆதரவு கொடுக்கலாமே தவிர நேரடியாகப் பங்குகொள்ளக்கூடிய சூழல் இல்லை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று, எரிபொருள் , அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வுப் பிரச்சினைகள் மாத்திரமே சிங்கள மக்களின் போராட்டத்தில் முன்வைக்கப்படுகின்றன. கோத்தாபய வீட்டுக்குச் சென்றுவிட்டால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்ற கருத்து ஏற்புடையதல்ல.

இரண்டாவது, சிங்கள அரசியல் கட்சிகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை மாற்றியமைத்தல் மற்றும் 19 ஆவது திருத்தத்தை மீளக்கொண்டு வருதல் அல்லது 20 ஐ ரத்துச் செய்து 21 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு மட்டுமே முற்படுகின்றனர். பிரதானப்படுத்தப்படும் இந்த இரு காரணங்களும் சிங்கள மக்களுக்கு மாத்திரமே உரியவை.

ஆனால் எழுபது ஆண்டுகால அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஈழத்தமிழர்களுக்கு இவை தீர்வாக அமையாது. இந்தவொரு நிலையிலேதான் சிங்கள மக்களின் தொடர் போராட்டத்தில் ஈழத் தமிழ் மக்கள் பங்கெடுப்பதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. இந்தப் போராட்டம் தொடர்பாக அவதானம் செலுத்திவரும் கொழும்பில் உள்ள அமெரிக்க, இந்தியத் தூதரகங்கள் கூட ஈழத்தமிழ் மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்கிறார்களா இல்லையா என்பதை உற்றுநோக்குகின்றனர். போராட்டத்தில் ஏன் பங்குகொள்ளவில்லை என்றெல்லாம் வேறு நபர்கள் மூலமாக அறிந்து வருகின்றனர்.அதற்கான உரிய காரணங்கள் சொல்லப்படும்போது, கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் அதனை மறுக்கவில்லை.

ஆனால் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்தல், 20 ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்தல், 19 ஐ அல்லது 21 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குதல் போன்ற விடயங்களில் சிங்கள மக்கள் ஆர்வமாகவுள்ளமைக்கு வெளிநாட்டுத் தூதரகங்களின் தூண்டுதலும் ஒரு காரணம்.

இலங்கையில் யார் ஆட்சி செய்தாலும் பிரச்சினையில்லை. தமக்குரியவாறான ஜனநாயகப்பண்புகளைக் கொண்ட ஆட்சியும், புவிசார் அரசியல் போட்டியில் இலங்கை சீனாவின் பக்கம் சென்றுவிடக்கூடாது என்ற கோணத்திலுமே அமெரிக்க, இந்திய அரசுகள் சிந்திக்கின்றன.

சீனாவும் தனக்குரிய ஆட்சியை அமைக்க இலங்கையின் தற்போதைய நெருக்கடியைப் பயன்படுத்துகின்றது என்பதும் உண்மையே. ஆகவே சிங்கள மக்களின் போராட்டத்தில் புவிசார் அரசியல் போட்டிகளும் உள் நுழைந்து விளையாடுவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த இடத்திலேதான் ஈழத்தமிழர்கள் விவகாரம் மேலும் பின்னோக்கியுள்ளது. சிங்கள மக்களினால் தற்போது முன்னெடுக்கப்படும் போராட்டம் இலங்கை ஒற்றையாட்சியைப் புதுப்பிப்பதற்கான மற்றொரு சிறிய ஏற்பாடு மாத்திரமே. இதையே சிங்களக் கட்சிகளின் கருத்துகளும் எடுத்துக் காண்பிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகாரம்: நல்லதா? கெட்டதா?



○ ந.பரமேஸ்வரன்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கருத்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை அறிமுகம் செய்த ஜே.ஆருக்குப்பின்னர் ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜனாதிபதிகளால், ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது முன்வைக்கப்பட்ட முக்கியமான விடயமாக இருந்திருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஜனாதிபதியாகப் பதவி வகித்த எவருமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க முன்வரவில்லை.

ஜே.ஆர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைக் கொண்டு வந்த போது, 'இந்தப் புதிய அரசியலமைப்பின் மூலம் ஒரு ஆணை பெண்ணாகவோ பெண்ணை ஆணாகவோ மாற்ற முடியாது, மற்றும்படி ஏனைய எல்லா விடயங்களையும் செய்யலாம்' எனக் கூறியிருந்தார் ஜே.ஆர். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது எதிர்க்கட்சிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் கடுமையாக விமர்சித்தன. ஒரு முட்டாளின் கையில் அதிகாரம் வழங்கப்பட்டால் என்ன நடக்கும்? என இடதுசாரிகள் கருத்து வெளியிட்டனர் . 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிய எந்த ஒரு அரசாங்கமும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது சஜித் பிரேமதாஸ நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென கூறிவருகிறார். ரணில், சம்பிக்க, என்று பலரும் அதையே கூறுகிறார்கள் . அவ்வளவு ஏன், மஹிந்தவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டுமென்கிறார்.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஜனாதிபதியின் கைகளில் கட்டுக்கடங்காத அதிகாரங்களை வழங்கியுள்ளது; ஜனாதிபதியை ஒரு முடிசூடா மன்னனாக்குகிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஜே.ஆரும் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் இதனையே கூறியிருந்தார். 'மக்கள் என்னை மன்னன் ஆக்கியுள்ளனர்' (people made me a King) என ஜே.ஆர் ஜனாதிபதியாக பதவியேற்றபோது கூறியிருந்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்பட வேண்டுமா என்ற விவாதம் தலைதூக்கியுள்ள நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையிலுள்ள சாதக பாதகங்கள் அல்லது நன்மை தீமைகள் பற்றி சற்று ஆராய்ந்து பார்ப்பது நல்லது. சிறுபான்மையினர் அல்லது தமிழர்களைப் பொறுத்த மட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை மூலம் தமிழர்களுக்கு சாதகமான விடயங்கள் சில இடம்பெற்றுள்ள அதே வேளை பாதகமான விடயங்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன.

தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வை வழங்கும் நோக்கத்துடன் செய்யப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம்,டட்லி-செல்வா ஒப்பந்தம் என்பவற்றை பண்டாரநாயக்காவாலோ டட்லி சேனநாயக்கவினாலோ அமுல்படுத்த முடியவில்லை. இவர்கள் நாடாளுமன்றத்துக்கு அல்லது சிங்களப் பேரினவாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்தனர். பண்டாரநாயக்கா, செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட போது பௌத்த பிக்குமார் ஒப்பந்தத்துக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். பண்டாரநாயக்கா, பிக்குகள் முன்னிலையிலேயே செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை கிழித்து எறிந்தார். டட்லி-செல்வா ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு டட்லியின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களே கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் கொடுத்த வாக்கை (செய்து கொண்ட ஒப்பந்தத்தை) நிறைவேற்ற முடியாத டட்லி 'நான் பிரதமர் பதவியை இராஜினாமா செய்யட்டுமா?'என செல்வநாயகத்திடம் கேட்டார்.அதற்கு செல்வநாயகம் உடன்படவில்லை.'எங்களுக்காக நீங்கள் இராஜினாமா செய்ய வேண்டாம்' எனக் கூறினார்.

இலங்கையில் பிரதம மந்திரியாகப் பதவி வகித்த இரண்டு பிரதமர்களாலும் தாங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களை அவர்களாலேயே அமுல்படுத்த முடியாமல் போய்விட்டது. இதற்கான அடிப்படைக்காரணம், நாடாளுமன்றத்திடம் அதிகாரம் இருந்தமை தான்.

ஜே.ஆர் , இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது தென்னிலங்கையில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. பிரதமர் பிரேமதாச இலங்கை-இந்திய ஒப்பந்தத்துக்கு எதிராக பிரசாரத்திலீடுபட்டார். அதேவேளை ஜே.வி.பி.யும் இந்திய எதிர்ப்பு பிரசாரத்தில் ஈடுபட்டது. இந்திய உற்பத்திகளை பகிஷ்கரிக்குமாறு கோரிக்கை விடுத்தது. பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சிங்கள மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கொல்லப்பட்டார். ஜே.ஆர் இந்த ஆர்ப்பாட்டங்கள் எதையுமே பொருட்படுத்தவில்லை . பிரேமதாசவைப்பற்றியோ,ஜே.வி.பி.யைப் பற்றியோ, பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஏனைய சிங்கள மக்களைப்பற்றியோ ஜே.ஆர். கவலைப்படவில்லை. ஊரடங்கு உத்தரவை நாடெங்கும் அமுல்படுத்தி விட்டு, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் ஜே.ஆர். ஒப்பமிட்டார். இதற்கு ஜே.ஆரிடம் நிறைவேற்று அதிகாரம் இருந்தமையே காரணம்.

அடுத்த விடயம் ஸ்ரீ.

இப்போது இரண்டு மூன்று விதமான இலக்கத்தகடுகளுடன் வாகனங்கள் இலங்கை முழுவதும் என்ற ஆங்கில எழுத்துக்கள் ஓடித்திரிகின்றன. பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் CEYLON என்ற எழுத்துக்கள் இடம்பெறும் வகையில் CL,CY,CE,CN என்ற ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட இலக்கத்தகடுகள் வாகனங்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வாறான இலக்கத்தகடுகள் பொருத்தப்பட்ட பிரிட்டிஷ் காலத்து கார்கள் சில இப்போதும் யாழ்ப்பாணத்தில் ஓடித்திரிகின்றன. 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க தனிச்சிங்களச்சட்டத்தை கொண்டு வந்த போது வாகனங்களின் இலக்கத்தகடுகளின் முன்னால் CEYLON என்ற ஆங்கில எழுத்துக்களுக்குப்பதிலாக சிங்களத்தில் 'ஸ்ரீ' (சிங்கள சிறி)என எழுதுமாறு உத்தரவிட்டார். இதற்கு எதிர்ப்புத்தெரிவித்து தமிழ் அரசியல்வாதிகள் தமது வாகனங்களின் இலக்கத்தகடுகளில் தமிழில் 'ஸ்ரீ 'என காட்சிப்படுத்தியவாறு யாழ்ப்பாண முற்றவெளியை வலம் வந்தனர். 1956,1958 ம் ஆண்டுகளில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது தமிழர்களின் முதுகில் சிங்கள கடையர்களால் கொதிக்கும் தாரால் சிங்களத்தில் 'ஸ்ரீ' என எழுதப்பட்டது. இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் பிரேமதாஸவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட புலிகள், பேச்சுவார்த்தைக்கான நல்லெண்ண சமிக்ஞையாக வாகன இலக்கத்தகடுகளின் முன்னால் உள்ள சிங்கள 'ஸ்ரீ' என்ற எழுத்து அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

> நிறைவேற்று அதிகாரம் கையிலிருந்தபடியால் தான் தமிழர் தரப்பால் இந்த இரு விடயங்களையும் சாதிக்க முடிந்தது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விடயத்தில் தமிழர் தரப்பு சிந்தித்துச் செயற்படுவதே பொருத்தமானது.

பிரேமதாஸ தனது ஆலோசகர்களான பஞ்சலிங்கங்களை அழைத்து (பிரேமதாசவின் அலுவலகத்தில் லிங்கம் என்ற பெயரில் முடிவடையும் தமிழ் அதிகாரிகள் ஐந்து பேர் பணியாற்றிக்கொண்டிருந்தனர்) இந்தப்பிரச்சினைக்கு என்ன தீர்வு ?என வினவினார் அவர்கள் சிங்களம், தமிழ்,ஆங்கிலம் எதுவும் வேண்டாம் ஒரு கோடு போதும் என ஆலோசனை வழங்கினர். புலிகளும் இதனை ஏற்றுக்கொண்டனர்.34 வருடமாக எரிந்து கொண்டிருந்த பிரச்சனைக்கு ஒரே இரவில் அல்லது 24 மணித்தியாலங்களில் தீர்வு கண்டார் பிரேமதாஸ. இதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் யாவும் இலக்கங்களுடன் கோடுகள் போடப்பட்டு உதாரணமாக 54 என பொறிக்கப்பட்ட இலக்கத்தகடுகளுடன் பாவனைக்கு விடப்பட்டன.

ஆக மொத்தத்தில் நிறைவேற்று அதிகாரம் கையிலிருந்தபடியால் தான் தமிழர் தரப்பால் இந்த இரு விடயங்களையும் சாதிக்க முடிந்தது. அதேவேளை பிரபா-ரணில் ஒப்பந்தத்துக்கு சந்திரிகா முட்டுக்கட்டை போட்ட விடயத்தையும் சொல்லத்தான் வேண்டும். எனவே நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விடயத்தில் தமிழர் தரப்பு சிந்தித்துச் செயற்படுவதே பொருத்தமானது. நிறைவேற்று ஜனாதிபதி முறை தமிழர்களுக்கு நல்லது என்பதே என் கருத்து.

## தமிழ்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல அவர்களுக்கு வெளியே இது போன்ற நெருக்கடியான தருணங்களில் மக்களுக்கு வழிகாட்டவல்ல சிவில் சமூகத் தலைமைகள் எத்தனை உண்டு? ஆன்மீகத் தலைமைகள் எத்தனை உண்டு?

இதுதொடர்பாக யாழ். வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவரிடம் உரையாடினேன். அவர் சொன்னார் "இப்போது நிலவும் விலை உயர்வை எந்த அரசியல்வாதியாலும் தீர்க்க முடியாது .நாட்டின் பொருளாதார நிலைமை அந்தளவுக்கு மோசமான ஒரு கட்டத்தை அடைந்து விட்டது" என்றும் அவர் கூறினார். இறக்குமதி செய்வதற்கு வணிகர்கள் பயப்படுகிறார்கள். யாராவது முன்வந்து இறக்குமதி செய்வார்களாக இருந்தால் அவர்களுடைய காலில் பூ போட்டுக் கும்பிடலாம் என்னுமளவுக்கு நிலைமை காணப்படுகிறது. ஒரு தொகுதி பெரு வணிகர்கள் இறக்குமதி நடவடிக்கைகளை நிறுத்தி விட்டார்கள்.

இறக்குமதி குறைந்தால் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும். மேலும் பெரும்பாலான வணிகர்கள் ஆறு மாதக் கடனில்தான் பொருட்களை இறக்குவதுண்டு. அந்தப்பொருளை விற்று கடனை அடைக்கும் காலகட்டத்தில் டொலரின் விலை எங்கேயோ போயிருக்கும்.

அதாவது பொருளை இறக்கும் போது இருந்ததை விட பலமடங்கு அதிகரித்திருக்கும். இதனால் வரக் கூடிய மேலதிக நட்டத்தையும் கவனத்தில் எடுத்தே வணிகர்கள் பொருள்களின் விலைகளைத் தீர்மானிக்கிறார்கள். எனவே இது விடயத்தில் டொலரின் பெறுமதியைக் கட்டுப்படுத்தும் சக்தியுள்ள அரசியல்வாதிகள்தான் விலைகளையும் கட்டுப்படுத்தலாம். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அப்படிப்பட்ட சக்தி இல்லை என்பதால் அவர்களில் யாராலும் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது என்று அவர் தெரிவித்தார்.

மேலும் எரிவாயு விநியோகத்தில் எரிவாயுக் கொம்பெனிகளின் தலையீடு காரணமாக சில சீரற்ற விநியோகங்கள் இடம் பெற்றிருப்பதை அவர் ஒப்புக் கொண்டார். எரிவாயுவை அந்தந்தப் பகுதியில் உள்ள விநியோகஸ்தர் ஊடாக வழங்கினாலே போதும் அவர்கள் தங்கள் வாடிக்கையாளர்களை ஏதோ ஒரு விதத்தில் திருப்திப்படுத்துவார்கள். ஆனால் கிராமமட்ட விநியோகஸ்தர்களிடம் பகிர்ந்தளிப்பதற்கு பதிலாக வேறு சில நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டதால் அதிக முறைப்பாடுகள் வந்தன என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். எனினும்,எரிவாயு உட்பட பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் சக்தி வர்த்தக சங்கங்களிடமும் இல்லை, எந்த ஒரு சமூக முகாமைத்துவத்திடமும் இல்லை என்று அவர் முடிவாகச் சொன்னார். அதாவது,நெருக்கடியான ஒரு காலகட்டத்தில்,பொருள்கள் பதுக்கப்படுவது,நியாயமற்ற விலை உயர்வு போன்ற விடயங்களில் வணிகர்கள் மீது செல்வாக்கைப் பிரயோகிக்கவல்ல பலமான தலைமைத்துவம் எதுவும தமிழ் மக்கள் மத்தியில் இல்லை? பொருள்களின் விலைகளும் இறங்கப்போவதில்லை.ராஜபக்சக்களும் சிம்மாசனத்தை விட்டு இறங்கப்போவதில்லை.ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பும்வரை காலிமுகத்திடலில் கூடியிருக்கும் மக்களும் வீட்டுக்குப் போகப் போவதில்லை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

## 1505-1948 வரை

**1854 டிசெம்பர்**

**சைவப்பிரகாச அச்சியந்திரசாலை ஆரம்பம்**

நாவலர் ஆரம்பத்தில் மானிப்பாயில் இருந்த அமெரிக்க மிஷன் அச்சகத்திலேயே சைவசமய விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களை அச்சிட்டார். பின்னர் சைவ அபிமானிகளின் உதவியுடன் அச்சு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்து துண்டுப்பிரசுரங்களையும் நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டார். நாவலர் அச்சிட்ட நூல்களில் 'சிவதூஷண பரிகாரம்' தான் முதலில் அச்சுவாகனம் ஏறியது.

**1855 பெப்ரவரி 03**

**டானியல் பூவர் காலமானார்**

1816 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த இவர் 1823 ஆம் ஆண்டு தெல்லிப்பழையிலும் வட்டுக்கோட்டையிலும் இருந்த ஒல்லாந்த தேவாலயங்களை நன்கொடையாகப்பெற்று பாடசாலைகளை ஆரம்பித்து மேலைத்தேயக் கல்வி முறையை அறிமுகம் செய்தார். வட்டுக்கோட்டையில் செமினறியும் ஆரம்பிக்கப்பட்டது. அமெரிக் கமிஷனால் 42 பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தப் பாடசாலைகளில் 1800 மாணவர்கள் கல்வி பயின்றனர். இந்தப் பாடசாலைகளின் நிர்வாகச்செலவுகளுக்காக 270 ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ் செலவிடப்பட்டது. இதற்காக 20 டொலருக்குக் குறையாத தொகை அமெரிக்கர்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டது.

**1855 நவம்பர் 15**

யாழ்ப்பாணக் கச்சேரியில் இரண்டாவது மொழி பெயர்ப்பாளராக பணி புரிந்த ஆசீர்வாத முதலியார் காலமானார்.

**1856**

யாழ்ப்பாணத்தை வாந்திபேதி தாக்கியது.

**1856 ஜூன் 24**

ஹென்றி மார்ட்டின் அமெரிக்க மிஷனரியினர் அன்பளிப்புச்செய்த புகைப்படக் கருவிகளை வைத்து தனது வீட்டில் புகைப்பட நிலையம் ஒன்றை ஆரம்பித்தார். இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது புகைப்பட நிலையம் இதுவே. இதன் மூலம் இலங்கையின் முதலாவது புகைப்படப்பிடிப்பாளர், முதலாவது பத்திரிகை ஆசிரியர் (உதயதாரகையின் ஆரம்பகால ஆசிரியர்) என்ற இரண்டு பெருமைகளையும் ஹென்றி மார்ட்டின் பெற்றுள்ளார்.

**1857 ஏப்ரல்**

முத்துக்குளிப்பு மூலம் 20, 000 ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ் வருமானம் கிடைத்தது.

யாழ்ப்பாணம் பிரதான வீதி முடியும் இடத்தில் முதலியார் சந்தியாகுப்பிள்ளை பாடசாலையொன்றை ஆரம்பித்தார். கதிரிப்பிள்ளையும் சந்தியாகுப்பிள்ளையுடன் இணைந்து பாடசாலையை நடத்தி வந்தார்.

இங்கு மகாபாரதம், நைடதம் ,குறள் என்பன போதிக்கப்பட்டன.1864 ஆம் ஆண்டு கதிரிப்பிள்ளை காலமானதும் நல்லூர்க் கந்தசாமி கோயில் ஐயர் விஸ்வநாத ஐயரின் மகன் இந்தப் பாடசாலையை நடத்தி வந்தார்.

1874 ஆம் ஆண்டு இந்தப்பாடசாலை மூடப்பட்டது. சி.வை.தாமோதரம்பிள்ளை சென்னைப்பல் கலைக்கழகத்தில் B.A பட்டம் பெற்றார். சென்னைப்பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டதாரி இவரே.

**1858 ஏப்ரல்**

முத்துக்குளிப்பு மூலம் 24,129 ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ் வருமானம் கிடைத்தது.

**1859 ஏப்ரல்**

முத்துக்குளிப்பு மூலம் 48,215 ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ் வருமானம் கிடைத்தது. யாழ்.நகரப் பகுதியில் குடிசனமதிப்பு மேற்கொள்ளப்பட்டது. யாழ்.நகரப்பகுதியின் சனத்தொகை 28,500

**1859 நவம்பர்**

அமெரிக்க மிஷனைச் சேர்ந்த ஹிச்கொக் (Hitchcok) பாலியர் நேசன் என்ற பெயரில் சிறுவர் சஞ்சிகையொன்றை ஆரம்பித்தார்.

டொன் நிக்லஸ் (Don Nichlos) திசைவீரசிங்க முதலியார் காலமானார். 1790 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் ஆட்சியில் யாழ்ப்பாணக் கச்சேரியில் தோம்புப் பராமரிப்பாளராக இணைந்து கொண்ட இவர், பிரித்தானியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து பிரித்தானியர் ஆட்சியிலும் தோம்புப் பராமரிப்பாளராக கடமையாற்றி வந்தார். ஒல்லாந்த மொழியில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த காரணத்தால் இவரை பிரித்தானியர் தமது ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து தோம்புப் பராமரிப்பாளராக நியமித்திருந்தனர்.

**1860 பெப்ரவரி**

யாழ்ப்பாணக் கச்சேரியில் நெல் எழுதுநராக கடமையாற்றி வந்த தாவீதுப்பிள்ளை (Davidu ppillai) காலமானார். இவரது ஞாபகார்த்தமாக இவர் வாழ்ந்த வீதிக்கு (பிரதான வீதியிலிருந்து கடற்கரை வீதிக்கு செல்லும் வீதிக்கு)அரசாங்க அதிபர் வில்லியம் துவைனம் டேவிட் வீதி எனப் பெயர் சூட்டினார்.

**1860 மார்ச்**

முத்துக்குளிப்பு மூலம் 36,681 ஸ்டேர்லிங் பவுண்ட்ஸ் வருமானம் கிடைத்தது.




**1861 மார்ச் 31**

ஹென்றி மார்ட்டின் காலமானார்.

**1861 ஜூலை**

சேர். முத்துக்குமாரசாமி சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். முன்னதாக கொழும்புக் கச்சேரியில் கடேற் உத்தியோகத்தராகவும் முல்லைத்தீவு நீதவானாகவும் முத்துக்குமாரசாமி கடமையாற்றியிருந்தார். ஆங்கிலேயர்களை விட சிறப்பாக ஆங்கிலம் பேசும் ஆற்றல் பெற்றிருந்த இவர் அரிச்சந்திரபுராணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விக்ரோறியா மகாராணியின் முன்னால் நடித்துக் காட்டியிருந்தார். அரிச்சந்திரன் சுடலை காக்கும் காட்சியில் விக்ரோறியா மகாராணி மயக்கமுற்று வீழ்ந்தார். இதனையடுத்து விக்ரோறியா மகாராணியின் மெய்ப்பாதுகாவலர்கள் முத்துகுமாரசாமியைக் கைது செய்தனர். மயக்கம் தெளிந்து எழுந்த விக்ரோறியா மகாராணி மிகுதிக் கதையையும் விவரிக்குமாறு கேட்டு கதை முழுவதையும் கேட்டறிந்து கொண்டார். மத்தியவங்கி முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி மற்றும் ராதிகா குமாரசாமி [illegible] சேர்.முத்துக்குமாரசாமி

(பயணங்கள் தொடரும்)



இராகவன்

அம்மா குடத்தை இறக்கி வைச்சிட்டு "என்னடியாத்தை இதிலையிருந்து மாங்காய் தின்னுறியள்?" எண்டு கேட்டுக் கொண்டு பக்கத்திலயிருந்திட்டா. நான் இருக்கேல்ல. எனக்குக் ஹெலி வந்திட்டாலுமெண்டு ஒரே அந்தரமாயிருந்திச்சுது.

36

அம்மாவும் பிராமணவளவுக்கை குமாரியக்கா நிக்கிறதைக் கண்டிட்டா. இரண்டு தகரப்படலையைத் திறந்து கொண்டு உள்ளுக்கை போனம். பலா மரத்துக்குக் கீழை டானாப்பட ஒரு பெரிய பங்கர் வெட்டிப் பனங்குத்தியளை அடுக்கி மண்மூட்டையடிச்சிருந்திச்சுது. பங்கர் வாசல்ல தங்கப்பெரியம்மா, பாலன், குமாரியக்கா, யோகமக்கா குடும்பம், பரமேசக்கா குடும்பம் எண்டு எல்லாருமிருந்து ஒரு நார்க்கடகம் நிரம்பப் பாண்டி மாங்காயளை வைச்சு வெட்டித் திண்டு கொண்டிருந்தினம். அம்மா குடத்தை இறக்கி வைச்சிட்டு "என்னடியாத்தை இதிலையிருந்து மாங்காய் தின்னுறியள்?" எண்டு கேட்டுக் கொண்டு பக்கத்திலயிருந்திட்டா. நான் இருக்கேல்ல. எனக்குக் ஹெலி வந்திட்டாலுமெண்டு ஒரே அந்தரமாயிருந்திச்சுது.

"இந்தத் தடுதாழிக்குள்ள எங்க சமைக்கிறது? அதுதான் எம்.பியாப்பாவின்ர மாமரத்திலயிருந்து பாண்டி மாங்காயளைப் பிடுங்கிக் கொண்டந்து வெட்டித் திண்டு கொண்டிருக்கிறம். இண்டைக்கு இதுதான் எங்கடை சாப்பாடு" எண்டு ஒரு பாண்டி மாங்காயை எடுத்துத் துண்டாக்கி அம்மாவிட்டக் குமாரியக்கா குடுத்தா.

"எனக்கு வேண்டாமடி பிள்ளை. அவனுக்குக் குடு" எண்டு அம்மா என்னைக் காட்டிவிட்டா.

"என்னடா நிண்ட நிலையாய் நிக்கிறாய்? இரடா கொஞ்சநேரம்" எண்டு குமாரியக்கா சொல்லிக் கொண்டு மாங்காய்த் துண்டை என்னிட்ட நீட்டினா. எனக்கும் மனங்கேக்கேல்ல.

குந்தியிருந்து கொண்டு மாங்காய்த் துண்டை வாங்கிக் கடிச்சன். சொல்லி வேலையில்லை. சரியான சித்தினிப்பு. என்ரை வாழ்நாளில அப்படியொரு இனிப்புள்ள மாங்காயை நான் தின்னேல்ல. அண்டைக்கு நான் மூண்டு முழுமாங்காயளைச் சத்தஞ்சலாரில்லாமல் திண்டு தள்ளிட்டன்.

"நீங்களென்ன இதுக்குள்ளேயே இருக்கப் போறியளோ அல்லது எங்கையேனும் போகப் போறியளோ?" எண்டு அம்மா அவையளிட்ட கேட்டா.

"இதுவரைக்கும் ஒரு முடிவுமில்லை. ஏதோ தப்பியொட்டி இருக்கிறம். பாப்பம்! தச்சந்தோப்பான் விட்ட வழியில போக வேண்டியதுதான்" எண்டு தங்கப்பெரியம்மா பெருமூச்சு விட்டுக் கொண்டு சொன்னா.

"சரி வாடா நாங்கள் வெளிக்கிடுவம். பிறகு ஹெலிகாரன் வந்தால் கரைச்சல்" எண்டு அம்மா குடத்தைத் தூக்கிக் கொண்டு எழும்பினா.


"இந்தாடா இதைக் கொண்டுபோ" எண்டு குமாரியக்கா இன்னும் மூண்டு பாண்டி மாங்கயளைத் தந்தா. அதுகளை வாளிக்குள்ள போட்டுக் கொண்டு அம்மாவுக்குப் பின்னால வெளிக்கிட்டன்.

அடுத்த நாளும் அதேமாதிரி நானும் அம்மாவும் வீட்டால வெளிக்கிட்டு அத்துளுவுக்குப் போய்த் தண்ணியள்ளிக் கொண்டு பெரியம்மா வீட்டை போனம். பெரியம்மா வீட்டிலயும் ஒருத்தருமில்லை. பிராமணவளவுக்கையும் ஒருத்தருமில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 சொற்சிலம்பம் போட்டி



அனுப்புபவர் பெயர்:............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

...................................................................

கையொப்பம்:...................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**சொற்சிலம்பம் போட்டி இல.80**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**29.04.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## இடமிருந்து வலம்

1.வலமிருந்து பார்த்தாலும் இந்த ஏளனப் புலவர் தோன்றுவார். 5. துணை என்று பொருள் தரும். 7. அடையாளம் 8. தொழுதல் 10. ஒரு பக்க உணவு 12. சாப்பிடு 13. நூறு ரூபாவிலும் நூறு 14. பாவம் செய்தவன் 16. நெருப்பு 17. இதன்காரம் பெரிது 18. பசளை 19. வடிவம் 20. குளிர்மை 21. சீனி தயாரிக்கும் மூலம் 23. வைகறையில் கீழ்வானத்தில் தோன்றும். 24. விதவை நிலைமை

## மேலிருந்து கீழ்

1. கமக்காரன் 2. கடுமையான 3. திருடுதல் 4. கண் 5. இணக்கம் 6. பலதையும் குறிக்கும் 9. புனித இடம் 11. விவசாயம் 15. பகுபத உறுப்பில் ஒன்று. 16. அகப்பை போன்றது 17. கறுப்பு நிறத்தைக் குறிக்கும் அடைமொழி 18. ஒத்தாசை 19. உருண்டு செல்லக்கூடியது. 22. நெருப்பில்லாமல் வராது.

## சொற்சிலம்பம் போட்டி 79 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சிதம்பரம் 6. வட 7. குதி 8. கரு 9. தம்பதி 11. பாடம் 12. வரம்பு 13. சுதந்திரம் 16. சதுரம் 17. பல் 18. மாமி 19. எரு 20. படுவான்கரை.

**மேலிருந்து கீழ்**

1.சிவதனுசு 2. தடம் 3. பகுதி 4. ரதி 5. விரும்புதல் 8. கடம் 10. பருந்து 11. பாரம் 12. வரம் 14. தசமி 15. திரட்டு 17. பருக. 18. மாது 19. என்

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

## போட்டி இலக்கம் 79 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
க.ஆதித்தியா
ஆண்டு 11
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

**2 ஆம் பரிசு**
க.பிருத்திகா
4 ஆம் கட்டை, மன்னார் வீதி பூநகரி.

**3 ஆம் பரிசு**
ரதி சிவவூலன்
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**4 ஆம் பரிசு**
இராஜமுத்து மஞ்சுளா
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்

**5 ஆம் பரிசு**
ச.கிருபன்
இல. 76 பழம் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்

# பயணங்கள் முடிவதில்லை!

தே.கோகிலவாணி

**பகுதி 8**



உலகில் நன்றி எனும் உணர்வை மனிதன் ஊழி வரை காத்துப் போற்றுவானா? இல்லை, என்ற அவநம்பிக்கையினாலேயே இறைவன் நாய்களைப் படைத்தான். அந்த நம்பிக்கையைக் கடைசி வரை காப்பாற்றி, உயிர் கொடுத்த நாய்களின் உண்மைக்கதை உலகெங்குமுள்ளது.

ஹச்சிக்கோ (Hachiko) எனும் நாய், ஜப்பானில் இப்படியொரு உண்மைக் கதையின் நாயகன். கடைவீதிகளையும் விற்பனைப் பெண்களையும் (Salesgirls) மட்டுமல்ல, ஹச்சிக்கோவையும் பார்ப்பதற்காகத்தான் சுற்றுலாவிகள் ஷிபூயாவுக்கு வருகை தருவார்கள்.

ஜப்பானில் அதற்கு அத்தனை மதிப்பு. ஹச்சிக்கோ தினமும் பணிக்குச் செல்லும் தனது எசமானுடன் ஷிபூயா புகையிரத நிலையம்வரை வந்து வழியனுப்பும். மாலை வந்து அழைத்துச் செல்லும். ஒருநாள் பணியிடத்திலேயே அவர் இறந்துவிட, ஹச்சிக்கோ காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பியது. வருவார் என்ற எதிர்பார்ப்புடன் தன் வாழ்நாள் முழுவதும், வருவதும் போவதுமாக இருந்து, ஒருநாள் அந்தப் புகையிரதநிலையத்திலேயே உயிர் விட்டது.

அதன் நன்றியுணர்வில் வியந்து, நெகிழ்ந்து போன மக்கள் அதன் ஞாபகத்தை நிலைநிறுத்த விரும்பினர். ஹச்சிக்கோவைச் சிலையிற் தத்ரூபமாக வடித்து அது உயிர்விட்ட இடத்திலேயே நன்றியின் ஞாபகச் சின்னமாக காலமெல்லாம் நினைவு கூரத்தக்க வகையில் நிறுவியுள்ளனர். ஷிபூயா நகரின் மையப்பகுதியில், புகழ்பெற்ற பாதசாரிகள் கடவைக்கு அண்மையாக, ஹச்சிக்கோவின் சிலை கம்பீரமாக நிற்கிறது. அதன் வரலாற்றை அறிந்தபோது இனம் புரியாத சோகத்தில் மனம் கனத்தது.

ஜப்பானில் குறிப்பாகச் ஷிபூயாவின் அங்காடித் தெருக்களில் அன்பாக, அழகாக, உற்சாகமாகப் பொருள்கள் விற்பனையில் ஈடுபட்டிருந்த பெண்களைப் பற்றிச் சிலாகித்திருந்தேன். எவரும் விரும்பத்தக்க வகையிலமைந்த அவர்களின் செயற்பாடுகளையும் குறிப்பிட்டிருந்தேன்.

உண்மையாகவே ஜப்பானியப் பெண்கள், விட்டு விடுதலையாகிச் சிட்டுக் குருவிகளாகச் சிறகடிக்கிறார்களா? என்று அறிய முற்பட்டபோது ஏமாற்றமே மிஞ்சியது. உலகின் பெரும்பான்மைப் பெண்களைப்போல் இவர்களின் மறுபக்கமும் பாராட்டத்தக்க வகையில் இல்லை. ஜப்பானின் வணிகச் சந்தையிலும் பெண்கள் காட்சிப் பொருள்களே. அவர்களின் ஒப்பனையும் கவர்ச்சியும்தான் பிரதான விற்பனைப் பொருளாகக் கருதப்படுகிறது. அதாவது பெண்களின் அழகையே நுகர்வுக் கலாசாரத்தில் விளம்பர மையமாக்கி, அதையே நுகர்வோரைக் கவர்ந்திழுக்கும் அஸ்திரமாகப் பயன்படுத்துகிறார்கள்.

அதற்காக மற்றவர்களின் விருப்புக்கேற்ப ஆடை, அணிகலன்களை அணியுமாறு அவர்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள்.

உதாரணமாக, ஜப்பானிய மகளிர், குறிப்பிட்ட பல பணியிடங்களில் தாம் விரும்பியபடி கண்களுக்குக் கண்ணாடியோ, கால்களுக்குச் செருப்போ அணிவது தடுக்கப்பட்டுள்ளது.



பார்வைக் கோளாறு இருப்பின் ' லென்ஸ்' மட்டுமே உபயோகிக்க முடியும். கண்ணாடி அணிந்தால் அழகுசாதனக் கடைகளில் விற்பனைப் பெண்களின் முக ஒப்பனையை முழுமையாக வெளிப்படுத்த முடியாது; வேறுசில இடங்களில், இளமை குறைந்து வயதானவர்களாகக் காணப்படலாம்; பாரம்பரிய உணவு விடுதிகளில் பொருத்தமின்றி இருக்கும் என இதனையிட்டுத் பல காரணங்கள் தொழில் வழங்குநர்களால் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறே, அவர்களின் அசௌகரியங்களைக் கருதாது பெண்கள் தமது நிறுவனங்களில் கம்பீரமாகத் தெரியவேண்டும் என்பதற்காகக் குதியுயர்ந்த காலணிகளை அணியுமாறும் கேட்கப்படுகிறார்கள். பெண்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, திறமை என்பவற்றுக்கான மதிப்புக் குறைவாகவே கணிக்கப்படுகின்றது.



மதுப்பிரியர்களான (குறிப்பாக பியர், அதுவே அவர்களின் அதிக விருப்பத் தெரிவு) ஜப்பானிய ஆண்களுடன் இரவு முழுவதும் கூடவேயிருந்து, மகிழ்வூட்டும் இரவுப் பெண்கள் ஜப்பானில் ஏரா ளம். ஆனால் சிரித்த முகத்தோடு அருகிருந்து, மதுவை ஊற்றிக் கொடுப்பது மட்டுமே அவர்களது கடமை என்று கூறப்படுகிறது. வாழ்க்கைச் செலவு அதிகமான ஜப்பானில், பெண்கள் தமது விருப்பு வெறுப்பைக்கடந்தும் உழைத்தே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்கும் அடிமைத்தனத்துக்கும் இது ஒரு எடுத்துக்காட்டு.

மேலும், மேற்குலகப் பெண்களைப் போல் அல்லாமல், ஜப்பானியப் பெண்கள் அரசியல், பொருளாதாரம், நிர்வாகம் போன்ற துறைகளில் அதியுயர் பதவிகளை வகிப்பதும் மிக அரிதாகவே காணப்படுகின்றது. பாரம்பரியம், மரபு என்பவற்றை அதிகம் கட்டிக்காக்கின்ற நாடு ஜப்பான்.

இத்தகைய கலாசாரத்தைக் கொண்ட சமூகத்தில் பெண்களுக்குரிய இடம் வழங்கப்படுமா? என்பதும் கேள்விக்கிடமானதே.

எனினும் பெண்களுக்கான அடக்குமுறைகளுக்கு எதிராக ஜப்பானியப் பெண்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். இது வரையிற் சில வெற்றிகளையும் பெற்றிருக்கிறார்கள்

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரியுபோலும் கிரிமியாவும்!

ஆர்.பிரகாஷ்

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையின் 55 ஆவது நாளில் மரியுபோல் நகரத்தைக் கைப்பற்றி அந்த நகரில் தனது முழுமையான ஆதிக்கத்தை நிலைப்படுத்தியுள்ளது ரஷ்யா. மரியுபோலின் அமைவிடம், அந்த நகரின் வளம் என்பவற்றைப் பார்க்கையில், கிரிமியக் குடாவுக்கு நேர்ந்த கதி மரியுபோலுக்கும் நிகழ்வதற்குரிய வாய்ப்புக்கள்தான் அதிகம்.

2014 ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கு உக்ரைன் முயற்சிகளை மேற்கொண்டதை அடுத்து ரஷ்யா உக்ரைனுக்கு எதிராகப் போர் தொடுத்தது. இதன்போது உக்ரைனின் ஆளுகைக்குக் கீழிருந்த கிரிமியாவை ரஷ்யா கைப்பற்றியது. கிரிமியா எண்ணெய் வளம் மிக மிக அதிகம் உள்ள ஒரு பகுதி. அத்துடன் கருங்கடல் வழியான வர்த்தகத்துக்கு கிரிமியக் குடா அதி முக்கியத்துவம் மிக்க கேந்திரப் பகுதி. 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான முறுகல்நிலை ஓரளவு தணிந்த போதிலும் கிரிமியக் குடாவை ரஷ்யா மீண்டும் கையளிக்கவில்லை. அது ஆக்கிரமிக்கப்பட்ட ரஷ்யப் பகுதியாகத்தான் இன்றளவும் இருக்கின்றது. கிரிமியாவை தனது நிலப்பரப்பாக சர்வதேசம் அங்கீகரிக்க வேண்டும் என்று ரஷ்யா தொடர்ந்து அழுத்தம் கொடுத்தும் வருகின்றது. கிரிமியக் குடாவைப் போன்றுதான் மரியுபோல் இயற்கை வளம் நிறைந்த பகுதி. ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான எல்லைக்கு அருகே மரியுபோல் இருக்கின்றது. எண்ணெய் வளம், எரிவாயு வளம், தாது வளங்களைத் தாராளமாகக் கொண்ட மரியுபோல், உக்ரைனின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்கும் முதன்மைச் சக்தியாக விளங்குகின்றது. உக்ரைனின் தலைநகர் கீவ் என்றால் வர்த்தக நகர் மரியுபோல். ஐரோப்பாவின் மிகப்பெரும் இரும்புத் தொழிற்சாலைகளில் ஒன்று மரியுபோலில்தான் இருக்கின்றது. அந்தத் தொழிற்சாலைக்கு எந்த ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாது என்ற சிறப்பு உத்தரவின் பின்னர்தான் மரியுபோல் ரஷ்யப் படைகளிடம் வீழ்ந்திருக்கின்றது. அதாவது, மரியுபோலை மீண்டும் உக்ரைனிடம் கையளிக்காமல் அதை ஆக்கிரமிப்பதற்குரிய அனைத்து சமிக்ஞைகளையும் ரஷ்யா வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆக, கிரிமியக் குடாவைப்போன்று மரியுபோலும் இனி ஆக்கிரமிக்கப்பட்ட ரஷ்யப் பகுதியாக இருக்கப்போகின்றது.

## ஏன் கீவ் தாக்கப்பட்டது?

சரி, மரியுபோலைக் கைப்பற்றுவதுதான் ரஷ்யப் படைகளின் நோக்கம் என்றால் அதை எப்போதே செய்திருக்கலாமே? எதற்காக தலைநகர் கீவ் வரை முன்னேற வேண்டும்? என்ற கேள்வி பலருக்கும் எழலாம். இங்கேதான் புடினின் மேற்கத்தேயத்துக்கு எதிரான ராஜதந்திரம் தனித்து நிற்கின்றது. உக்ரைனில் திட்டமிட்ட 'பொருளாதாரச் சிதைப்பை' புடின் கனகச்சிதமாக மேற்கொண்டிருக்கின்றார். நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிராகத்தான் இந்தப் போர் தொடுக்கப்பட்டது. அதேநேரம் ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைவதில் ரஷ்யாவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நேட்டோதான் இராணுவக் கூட்டணிகளுடன் தொடர்புடைய நாடு. அதில் உக்ரைன் இணைந்தால்தான் அது ரஷ்யாவின் இருப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும். ஐரோப்பிய ஒன்றியத்தில் உக்ரைன் இணைந்தால் அது உக்ரைனின் பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். இந்தப் பொருளாதாரச் சிதைப்புக்குப் பின்னர் ஐரோப்பிய ஒற்றியத்தில் உக்ரைன் இணைவதால் எந்தத் தீமையும் (பொருளாதாரம் சார்பில்) ரஷ்யாவுக்கு ஏற்படப்போவதில்லை.

இன்னும் சொல்லப்போனால், உக்ரைனில் ரஷ்யா ஏற்படுத்திய பில்லியன் டொலர் கணக்கான அழிவுகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் பணத்தை வாரி இறைக்க வேண்டி வரும். இப்போது உக்ரைனை ஒன்றியத்தில் இணைக்க வேண்டுமா இல்லையா என்பதை ஐரோப்பிய ஒன்றியம்தான் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு இணைத்தால் யூரோ பெறுமதி இழக்கும். அதைத்தான் ரஷ்யாவும் விரும்புகின்றது. இதைத்தான் எம் முன்னோர்கள் தெளிவாகச் சொல்லிவைத்தனர் 'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்'.




# மானத்தி

கருணை ரவி

கிளினர் தெய்வேந்திரம் பூங்கொடியைத் தேடினான். ஊரை விட்டு வெளியேறி இரண்டு நாட்களாகிவிட்டன. இன்னும் வீட்டுக்கு வரவில்லை.

ஓரிரு சனங்கள் மாத்திரமே ஊரில் இருந்தார்கள். உடுப்பிட்டி, திக்கம், பொலிகண்டி, நவிண்டில், கொற்றாவத்தை என ஊர்ச் சனங்கள் போய்விட்டார்கள்.

கடற்கரையில் நேவிக்காரர் ஷெல்கள் அடிக்க, விமானங்கள் குண்டுகள் போட்டுக்கொண்டிருந்தன. பயணிகள் விமானங்கள் மலம் அடைத்த பீப்பாக்களை ஊர்மனைக்குள் கொட்டிக்கொண்டிருந்தன. குண்டுகளின் அகோரங்களாலும் மலங்களின் மணங்களாலும் சனங்கள் வெளிக்கிட்டார்கள். போன சனங்கள் இன்று தான் கொஞ்சம் கொஞ்சமாக திரும்பிக்கொண்டிருந்தார்கள். ஷெல்களும் ஓய்ந்துவிட்டன. பூங்கொடியைத் தேடி அலுத்த கிளினர் தெய்வேந்திரம் பூங்கொடிவீட்டு இடிந்த கட்டடத்தில் இருந்தான்.

மரியதாஸ் குடும்பம் கரணவாயில் இருந்து வந்தது. இனி ஊரைவிட்டு வெளிக்கிடுவதில்லை என மரியதாஸ் சொன்னான். ஒரு அறையைச் சுற்றி மண்மூடைகள் அடுக்கி, அதற்கு மேல் பனங் குற்றிகள் போட்டு பலமான பதுங்குகுழி போடுவதாகச் சொன்னான். பண்டத்தரிப்பு சகோதரி வீட்டில் பனைகள் நிற்பதாகவும் அங்கு போய் பனைகளைத் தறித்துக்கொண்டு வருவதாகவும் சொன்னான்.

பூங்கொடி வந்தாள். அவள் இடம் பெயர்ந்து போகும்போது ஒரு உடுப்புப்பை மட்டும் கொண்டுபோனாள். அவளிடம் வேறு பொருட்கள் இல்லை. சாப்பாடு, கனகமும் பிலிப்பும் கொடுத்தார்கள். பிலிப்பு பண உதவிகள் செய்தான். பூறாட்டி செத்தது அவனுக்கு கவலை. பூறாட்டி செத்தநாளில் இருந்து தோட்டத்தால் வரும் வேளைகளில் மரக்கறிகளை பூங்கொடிக்கு கொடுப்பான்.

பூங்கொடி தலையில் கொண்டு வந்த பையை இறக்கி திண்ணையில் வைத்தாள். நிருபன் நடந்த களையில் விறாந்தையில் படுத்தான். கிளினர் தெய்வேந்திரம் வந்தான். தெய்வேந்திரத்தைக் கண்டதும் சிரித்தாள். அவளில் களை அப்பியிருந்தது. கமக்கட்டுச்சட்டையில் வியர்வை கட்டியிருந்தது. கிளினர் தெய்வேந்திரம் தான் ஊரை விட்டு வெளியேறாததை பெருமையாகச் சொன்னான்.

தெய்வேந்திரம் அவளின் வீட்டுக்கு வந்ததில்லை. ஆட்கள் இல்லாத வீடுகளில் சிலர் சாமான்களைத் திருடுவதாகவும் ஆடுமாடுகளைக் கடத்துவதாகவும் பிலிப்பு சொல்வான். தெய்வேந்திரத்திடம் பொய், களவு எதுவுமில்லை. உதவி செய்யும் மனப்பாங்கு அவனிடம் இருக்கிறது. ஆனால், அவன் வீட்டுக்கு வந்தது அவளுக்கு குழப்பமாக இருந்தது. சிலவேளை அவன் தனது ஆடுகள், கோழிகளைத் தேடித் தான் வந்திருப்பானா? தெய்வேந்திரம் சிரித்துக்கொண்டு கேட்டான்

"இவ்வளவுநாளும் எங்கை இருந்தனீங்கள்?"

அவன் கிழவன் செத்ததைச் சொல்லவில்லை. உடனே சொல்லவும் விரும்பவில்லை.

"கரணவாயிலை இருந்தனாங்கள்"

"நித்தி நேற்று இஞ்சை வந்தவன். உன்னைத் தேடினவன்"

காய்ந்த முகத்தில் மலர்ச்சி மொட்டவிழ்த்தது. முகச்சுருக்குகள் எல்லாவற்றையும் அந்தச் சொற்கள் மறைத்தன. அந்தச் சொற்களுக்கு எவ்வளவு வீரியம் என்பதை அவளின் முகத்திலிருந்து அவன் தெரிந்து கொண்டான். அவள் இவ்வளவு நாளும் எதிர்பார்த்த நித்தி ஆட்களற்ற வீட்டையும் ஆட்களற்ற வீதிகளையும் பார்த்துவிட்டுச் சென்றதை நினைத்துக் கவலையடைந்தாள்.

"நித்தி பெருத்திட்டானா? ஆரைப்போல இருக்கிறான்? பெரிய மீசையாம்? இனி எப்ப வருவான்?"

அவள் இப்படியே கேள்விகளால் தெய்வேந்திரத்தைத் துளைத்தாள். அந்தக்கேள்விகள் தெய்வேந்திரத்தை சலிப்படைய வைக்கவில்லை. அவள் மேல் இரக்கத்தைக் கொடுத்தது. ஒரு தாய் மகன் மேல் கொண்ட பாசத்துக்கு அளவேதுமில்லை என்பதை அவளிடம் தெய்வேந்திரம் கற்றபடியிருந்தான்.

"இனி எப்ப நித்தி வருவான்?"

"வாறதைச் சொல்லேலை. உன்னைச் சந்திக்கு கூட்டிக் கொண்டு போகத்தான் வந்தவன்"

கோயில் என்றதும் அவளுக்கு தேர்தான் ஞாபகத்தில் வந்தது. தேர் எரிந்து சாம்பலாகுவதற்கு முதல் அதைக்காட்டுவதற்கு கூட்டிக் கொண்டு போக, நித்தி வந்ததாக நினைத்தாள்.

"கிழவன் எங்கை இருக்கிறாராம்?"

அவள் கிழவனைக் கேட்டாள். அவனும் நித்தியும் சேர்ந்து சாக்கில் துண்டுகளாகக் கிடந்த கிழவனை கிடங்கில் போட்டு மூடும் போது பூங்கொடி இல்லாததை நினைத்து அழுதழுது நித்தி அவர்மேல் மண்ணை போட்டுக்கொண்டிருந்தான்.

"அம்மா..."

அம்மா என்று சொல்லும்போது கண்ணீர் பிணக்குழியில் விழுந்தது. அவரை புதைக்கும்போது தாய் இல்லை என நினைத்து அவன் 'அம்மா..'. என்றிருந்தான். அம்மாவுக்குப் பிறகு அவனின் வாய்கள் வேறு வார்த்தைகளைச் சொல்லவில்லை. தெய்வேந்திரம் இனி சொல்லாமல் இருக்க விரும்பவில்லை

"கந்தவியப்பாவை காட்டத்தான் நித்தி வந்தவன். நீ வீட்டிலில்லை. நானும் நித்தியும் கிழவனை மண்ணுக்குள்ள மூடினாங்கள்"

"ஐயா..."

அப்படியே இருந்தபடி கத்தினாள். குளம் மாதிரி கண்ணீர் குபு குபுத்தது. அவளின் சத்தத்தில் தென்னையில் இருந்த காகங்கள் பறந்தன. நிருபனின் முகத்தை பயம் திருக, தாயின் மடியில் வந்து இருந்தான். நாட்கள் நகர்ந்தன... ஹெலிகொப்டர் இப்ப வந்து சுடுவதில்லை. குண்டு போடும் விமானங்களும் பதிவாக வருவதில்லை. இப்ப பயமின்றி கடற்கரையில் மீனவர்கள் கூடுவார்கள். நேவிக்காரர் இருந்திட்டு போறாப்படகிலிருந்து கரைக்கு குண்டுகளை ஏவுவார்கள்.

இன்று கடலுக்கு மீன்பிடிக்க எவரும் போகவில்லை. நேற்று கடலுக்குப்போன அந்தோனியும் பேதுருவும் இன்னும் கரைக்கு வரவில்லை. அந்தோனிக்கும் பேதுருவுக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவர்களின் முடிவு தெரிந்தபிறகுதான் கடலுக்குப் போவதாக ஜோசப் சொன்னான்.

அடுத்தநாள் விடிய சுப்பர்மட வாய்க்காலில் படகு ஒதுங்குவதாகச் சனங்கள் இரவிரவாக ஓடினார்கள். படகில் துப்பாக்கித் துளைகள் இருந்தன. நேவி படகுக்குச் சுட அந்தோனி கடலில் குதித்திருப்பான். அந்தோனி நல்ல சுழியோடி [illegible] இருப்பான். [illegible] எடுத்தான் கூட்டிக் கொண்டு போவார்கள். கடலில் சண்டை நடந்து ஆமியின் படகுகள் மூழ்கினால் அதை மீட்க அந்தோனியைத் தான் இயக்கம் கூட்டிக் கொண்டு போகும்.

அந்தோனியின் படகில் துளைகள் இருந்தும் சனங்கள் அந்தோனியை செத்திருக்காது என்று கதைத்தார்கள். அந்தோனியும் பேதுருவும் வருவார்கள், இருவருக்குமாக ஜெபித்தார்கள். ஐந்து நாட்களால் அந்தோனியின் பொடி பருத்தித்துறை வெளிச்சவீட்டடியில் ஒதுங்கியது.

பேதுருவின் பொடி எங்குமில்லை. அந்தோனியின் இறப்புக்குப்பிறகு ஆழக்கடலுக்கு எவரும் தொழிலுக்குப் போவதில்லை. ஐநூறு யாருக்குள்ளே தொழில் செய்தார்கள்.

கடற்கரை இப்போ முந்தியமாதிரி இல்லை. பிலிப்பு கடற்தொழிலை விட்டு தோட்ட வேலை செய்வது மாதிரி ஒவ்வொருவரும் வியாபாரம், தச்சுத்தொழில், மேசன் தொழில், மெக்கானிக் என தங்களின் தொழில்களை மாற்றினார்கள். பூங்கொடிக்கு இப்ப கடற்கரையில் வேலை இல்லை.

உண்டியலைப் போய் உடைத்தாள். சில்லறைகளை எண்ணினாள். ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்தெட்டு ரூபா. அதை கடைக்குக் கொண்டுபோய் தாள்காசாக்கினாள். ஆயிரம் ரூபாவை சீலையில் முடிந்தாள். அது நித்திக்கு என நினைத்தாள். மிகுதிக்காசை செலவுக்கு வைத்திருந்தாள்.


வீட்டில் கண்ணாடி இல்லை. வீடு எரிந்த பிறகு கண்ணாடியில் அவள் தனது முகத்தைப் பார்க்கவில்லை. சின்ன வட்டக்கண்ணாடி ஒன்று வாங்கினாள். முகத்தைக் கண்ணாடியில் பார்த்தாள். குங்குமம் நெற்றியில் இல்லாததை நினைக்க கண்ணீர் வந்தது. கன்ன மயிரில் நரை விழுந்திருந்தது. முகத்தில் தேமல் படர்ந்திருந்தது. கண்களைச் சுற்றி கறுப்பாய் கருவளையங்கள் போட்டிருந்தன. தலை முடிகள் இடைக்கிடை பழுத்து செம்படை படிந்திருந்தன. கடைசியாக காதைப் பார்த்ததும் திகைத்தாள். நித்தி எடுத்துக் கொடுத்த தோடுகளில் ஒன்றைக் காணவில்லை.

(வருவாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரிக் கூழ வட்டி தழீஇ" (கலி.109)
"வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள்..." (ஐங.48)
"கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மானதசை சொரிந்த வட்டியும்..." (புறம்.33)

# ஓலைப் பெட்டி





○ தி.செல்வமனோகரன்

**13 அற்றைத் திங்கள்**

பூவுலகின் கற்பகதரு பனை எனப்படுகிறது. மனிதருக்குத் தன் வேரிலிருந்து ஓலைவரை எல்லா உறுப்புக்களாலும் பயன் தருவது. அதன் ஓலை மனிதருக்கு கூரை வேய்தல், வேலியடைத்தல், மாடுகளுக்கு உணவாதல், அடுப்பு மூட்ட, பெட்டி செய்ய எனப் பல வகையிலும் உதவுகிறது. பனையின் குருத்தோலை வெண்மை கலந்த பழுப்பு நிறத்தில் மென்மையும் வளவளப்பும் நிறைந்த மெல்லிய ஓலையாக இருக்கும் விரித்தால் விசிறி போல விரியும். அதனை நிழலில் தொங்கவிட்டு ஈரலிப்பு அகன்றபின் ஒவ்வொரு ஓலையாக (ஏடாக) பிரித்து எடுத்து அதனைக் காயவைத்து பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவர்.

பச்சை நிறமும் தடிப்பும் உடைய உறுதியான பனையோலை சாரோலை (சார்வோலை) எனப்படும். அதனை வெட்டி விரித்து, வெயிலில் காயவிட்டு பின்பு அடுக்கடுக்காய் கட்டி வைத்துப் பயன்படுத்துவர். குருத்தோலை, சாரோலை என்பவற்றிலிருந்து ஈர்க்குகளை வேறாக்கவும் ஓலைகளை தமக்குத் தேவையான அளவுத்திட்டத்தில் கீலங்கீலமாகக் கிழிக்கவும் பயன்படுத்தப்படும் கருவி சத்தகமாகும். கொக்கைத் தடியில் கட்டப்படுவது சத்தகம். ஓலை கிழிக்கவும் வாரவும் பயன்படுவது காம்புச் சத்தகம் எனப்படும். பனையோலையால் செய்யப்படும் பல பொருட்களுள் பிரதானமானது ஓலைப் பெட்டிதான்.

சங்க இலக்கியம் ஓலைப் பெட்டியை 'வட்டி' எனும் சொல்லால் சுட்டுகிறது. பெட்டிகள் இறைப்பெட்டி, அரிசிப் பெட்டி, காசுப்பெட்டி, மணிப்பெட்டி, கொட்டப்பெட்டி, வெற்றிலைப் பெட்டி, குட்டான், நீத்துப் பெட்டி, கடகம் எனப் பலவகையின. இவை யாவும் ஓலையை முதன்மைப் பொருளாகக் கொண்டு ஆக்கப்படுகின்றன. குருத்தோலையால் பின்னப்படும் பெட்டிகள் இடைவெளியற்ற மிகநெருக்கமான பின்னல் உடையனவாகவும் அழகும் கவர்ச்சியும் மிகுந்தனவாகவும் காணப்படுகின்றன. சாரோலை அளவு சற்றுப் பெரிதாகக் கொண்ட கீலங்களையும் நூலிழையளவான வெளிகளைக் கொண்டவையாகவும் உறுதிப்பாடானவையாகவும் உள்ளன. இரு ஓலைக் கீலங்களை எடுத்து ஒன்றன் மீது ஒன்றாக வைத்து மாறி மாறிப் பின்னி பெட்டி இழைக்கப்படும். இப்பின்னல் முறைகள் பலவுள. ஓலைப்பெட்டிகள் பெரும்பாலும் பாய்ப் பின்னல் முறையிலும் கடகப் பெட்டி, நார்ப்பெட்டி, கூடைகள் சுற்றுப் பின்னல் முறையிலும் அமைய மீன் வாய்ப்பெட்டி, சந்தைக் கூடை முதலியன மிஞ்சி முடிச்சு முறையிலும், வெங்காயப் பெட்டி அல்லது கூடை இடைவெளியுள்ள கண் கன்னல் முறையிலும் இழைக்கப்படுகின்றன.

அதேவேளை ஓலைக் கீலங்களையும் மரச்சாயங்களையும் (வர்ணம்) வேக வைத்து குறித்த நிறத்தை உடையதாக்குவர். பிற்காலத்தில் சாயத்தூள்களைக் கொதி நீரில் இட்டு கொதிக்க வைத்து ஓலைகளை அதனுள் குறிப்பிட்ட நேரம் அவிய விட்டு பின் குளிர் நீரில் கழுவி நிழலில் காயவைப்பர். அது நீண்ட காலம் கெடாது இருக்கும். ஓலைப்பெட்டிகள் இழைக்கும்போது இடையில் சாய ஓலைக் கீலங்களையும் சேர்ப்பதால் அவை அழகுத் தன்மை பெறும். பெட்டிகள் உறுதியாக நீண்ட காலப் பாவனைக்குரியதாக இருக்கும் வகையில் இளம் பனை மட்டையின் உட்பகுதி நாராக வாரப்பட்டு அதனைக் கொண்டு முடைவர். அந்த நார் "அகணிநார்" எனக் கூறப்படுகின்றது.

சார்வோலையைப் பயன்படுத்தி எண்பதுகளுக்கு முன்பு மிட்டாய்ப் பெட்டி, பழப்பெட்டி, பூப்பெட்டி, பூக்குடலை, கருப்பெட்டி அல்லது பனங்கட்டி இடுவதற்கான பல்வேறு அளவுகளான குட்டான்கள் செய்யப்பட்டன. வார்ந்தெடுக்கப்பட்ட ஈர்க்குகளில் செய்யப்பட்ட பெட்டிகள் கோயிற் தேவைகளுக்கு அதிகம் பயன்படுத்தப்பட்டன. முற்றாக விரியாத சாரோலையிலான பெட்டிகள் மிகச் சிறிய அளவிலிருந்து பல்வேறு அளவுகளில் செய்யப்பட்டன. இந்தப்பெட்டிகள் பிட்டுச் செய்வதற்காக மாவைக்குழைத்து சிறு துகள்களாகக் குற்றுவதற்கும் அவித்த பிட்டு, இடியப்பம், இட்டலி என்பவற்றையும் சுட்ட தோசையையும் வைத்து பழுதாகாது பேணவும் உதவுகின்றன. அத்தோடு எறும்பு, பூச்சி என்பவற்றிலிருந்து பாதுகாக்கவும் உதவுகின்றன. உணவு வேர்த்துப் பழுதடைவதும் இல்லை. பனங்காய்ப் பணியாரம், வாய்ப்பன் போன்றவற்றையும் லட்டு, அச்சுப் பலகாரங்கள் முதலியவற்றையும் நீண்ட காலம் பேண உதவுகின்றன. ஓலைப்பெட்டியால் பாதிப்புத் தரும் பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. மாறாக ஆரோக்கியமும் சுவையுமே கிடைக்கின்றன.

ஓலைப்பெட்டிகளில் மரக்கறிகளை இட்டு வைக்கமுடியும். திருமணகாலச் சீர்வரிசைகள் வழங்கவும் உதவுகின்றன. கோயில்களில் அர்ச்சனைப் பெட்டிகளாக, அன்னதான உணவை இலையிட்டு கொண்டு செல்லும் பாத்திரமாக, பிரசாதம் வழங்க உதவுவதாக எனப் பல





வடிவங்களைப் பெட்டிகள் பெற்றுக்கொள்கின்றன. மேசையில்லா வீடுகளில் பெட்டியைக் கவிழ்த்துப் போட்டு விட்டு அதன் மேல் உணவுத் தட்டை, வாழையிலையை வைத்து உணவு உண்ணும் வழக்கமும் உண்டு. மங்கல நிகழ்வுகளில் பயன்படுத்துவது போல பெட்டிகள் அமங்கல நிகழ்வுகளிலும் முதன்மை பெறுகின்றன. மரண வீட்டில் வா[illegible]க்கரிசி கொண்டு செல்லவும், கழிப்புக் கழிக்கும் நாளில் கழிப்புப் பொருட்களைக் கொண்டு செல்லவும் படையற் பாத்திரமாகவும் இருக்கின்றது. காசு கொண்டு செல்லும் சிறு பையாக மணிப் பெட்டியாக, கொட்டப் பெட்டியாக விளங்கும் பெட்டிகளும் உண்டு. அவை சப்பையாக, மூடி உடையனவாக இடுப்பில் செருகிக் கொண்டு செல்லத்தக்க அளவு காணப்படும். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை என்பன வைக்கும் வெற்றிலைப் பெட்டிகளும் உண்டு. படையலுக்குப் பயன்படுத்தப்படுகின்ற தட்டுவம், மா அரிக்க, வறுத்த மாவை ஆறவிட எனப் பல்வேறு பயன்படும் தட்டையான அகலமான தட்டுப்பெட்டி என இன்னும் பலவுள. பெட்டிகளில் மிகப் பெரியது கடகமாகும். கடகம் என்பதற்கு தமிழிலக்கியங்களில் வளையல், அணிகலன், யானைக் கூட்டம் எனப் பொருள் கொள்ளினும் "சேர்த்தல்" எனும் பொருளும் உண்டு. கடகம் பொருட்களைச் சேர்த்து வைத்திருப்பதாகும். கூடியளவு பொருட்களைக் கொள்ளும் கொள்கலன் இது. ஓரங்குல இரண்டங்குல சார்வோலைகளால் பின்னப்படும்போது பிறிதொரு அதே அகல கீல ஓலையையும் இணைத்து பின்னுவதனால் அல்லது பொத்துவதனால் கடகம் உறுதிமிக்கதாகின்றது. இளம் பனை மட்டையினை இரண்டாகப் பிளந்து உள் மட்டையை இரண்டங்குலமளவில் கடகத்தின் விளிம்பில் வைத்து அகணி நாரினால் அல்லது பனம் ஈர்க்கினால் கட்டுவர். அது கடகத்தை உறுதியானதாக்கும். அதேவேளை கடகத்தின் வெளிப்புறத்தில் அகணி நாரினால் அல்லது பனம் ஈர்க்கினால் பின்னி மேலும் கடகத்தை உறுதிப்படுத்துவர்.

கடகமானது சிறிய கடகம், பெரிய கடகம் எனப் பொதுவில் சொல்லப்படும். சிறிய கடகம் கட்டட வேலைகளுக்கு அதிகம் பயன்படுத்தப்படும். யாழ்ப்பாணத்தில் தீவுக் கடகங்களுக்கு தனி மவுசு இருந்தது. கடகமானது மீன், இறைச்சி, மரக்கறிகள் , பழவகைகள் கொண்டு செல்லவும் வைத்து விற்பனை செய்யவும் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக பெண்கள் தலைச் சுமையாக இவற்றைத் தெருத்தெருவாக நடந்து கொண்டு சென்று விற்கக் கடகத்தையே பயன்படுத்தினர். சபை சந்திகளில் சோறு பரிமாறக் கடகமே பாத்திரமாக நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டது. ஆலயத் திருவிழாக்களில் பொருட்கள், பலகாரங்கள்,பழங்கள் உள்ளிட்டவற்றை கொண்டு போகவும் வரவும் தூய்மைப் பாத்திரமாக இது பயன்படுத்தப்பட்டது.

உணவு செய்யப் பயன்படும் ஓலைப்பெட்டியாக நீத்துப் பெட்டி (நீற்றுப் பெட்டி) விளங்குகின்றது. இது குருத்தோலை, சார்வோலை, அகணி நார், ஈர்க்கு என்பவற்றால் ஆக்கப்படுகின்றது. மாவு அவிக்க கீழே கூர்மையும் மேலே அகன்ற குழல் போன்ற அமைப்புடைய நீத்துப்பெட்டியும் பிட்டு அவிக்க தனித்துவமான நீத்துப் பெட்டியும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றுவரை இவை செல்வாக்குள்ளவையாகத் திகழ்கின்றன. மேற்படி செயற்பாடுகள் தவிர எண்ணெய்ப் பலகாரங்களைச் சுட்டு எண்ணெய் வடிய வைக்கவும், ஊற வைத்த அரிசியை நீர் வடிகட்டவும் இவை பயன்படுகின்றன. எண்ணெய்ச் செக்குகளில் எண்ணெயைத் தூய்மைப்படுத்த வடிக்க உதவும் அளவில் பெரிய நீத்துப்பெட்டி பயன்படுத்தப்படுகின்றது. பண்டைய காலத்தில் நீரினை இறைக்க இறைப் பெட்டி எனும் ஓலைப்பெட்டி பயன்படுத்தப்பட்டது. நீர்ப்பம்பிகள், வாளிகள், மோட்டார்களின் வருகை இதனை இல்லாமல் செய்து விட்டது. நீரூற்றும் பட்டையும் ஓலைப் பெட்டியின் ஒரு வடிவம் எனக் கொள்ளலாம்.

பித்தளை, செப்பு, சில்வர் பாத்திரங்களின் வருகை ஓலைப் பெட்டிகளின் பயன்பாட்டைப் பாதித்தாலும் பிளாஸ்ரிக் பாத்திரங்களினதும் பொலித்தீன் பைகளினதும் வருகை அவற்றின் பயன்பாட்டை முழுவதுமாக இல்லாது செய்துவிட்டன. விலை, பேணுகை, இலகு தன்மை போன்ற காரணிகள் இதற்கடிப்படையாயின. அதேவேளை பிளாஸ்ரிக் பொருட்கள் தரக்கூடிய பக்கவிளைவுகள் சூழலுக்கும் மனித ஆரோக்கியத்துக்கும் சவாலானவை என்பதை அறிந்தும் அவற்றைக் கைவிடாத எமது செயற்பாடுகள் மிகவும் அநாகரிகமானதும் 'படித்த முட்டாள்தனச்' செயற்பாடுகளாகவும் உள்ளன. இயற்கையோடிணைந்த ஓலைப் பெட்டிகளை மீள முழுவதுமாக நவீன வடிவில் வடிவமைத்துப் பயன்படுத்துவதால் ஆரோக்கியம் ஏற்படும். சூழல் பாதுகாக்கப்படும். தற்சார்புடைய சுய பொருளாதாரம் மேம்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டாரே ஒரு கேள்வி



மது அரசியல் வாழ்வில் 50 வருடகால நட்பைக் கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்காரவும் திடீரென்று சந்தித்துள்ளார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அழைப்பின்பேரில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இருவரும் மனம் திறந்து கலந்துரையாடியுள்ளனராம்.

குறிப்பாக பிரதமர் மஹிந்தவுக்கு வழங்கிய சில ஆலோசனைகளை இதன்போது வாசுதேவ நாணயக்கார நினைவுபடுத்தியுள்ளார்.

" மஹிந்த, உங்களை 2015 இல் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்ல வேண்டாம் என கூறினேன், அதனை நீங்கள் ஏற்கவில்லை. இறுதியில் என்ன நடந்தது?

கோத்தாபய ராஜபக்சவுக்கு பதிலாக, சமலை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவைக்குமாறும் கூறினேன். அந்தக் கோரிக்கையும் ஏற்கப்படவில்லை. தற்போது என்ன நடக்கின்றது?"

இவ்வாறு சில கேள்விகளை எழுப்பி, " எனது அரசியல் வாழ்வில் உங்களுக்கு வழங்கிய ஆலோசனைகளுள் ஏதேனும் ஒன்று பிழைத்துள்ளதா?' எனவும் வாசு, மஹிந்தவிடம் கேட்டுள்ளார்.

அதற்கு மஹிந்தவும் மனம் வருந்தியுள்ளார்.

" உங்களுக்கு இந்த நாட்டில் செல்வாக்கு இருந்தது, மக்கள் பெருந்தலைவராக ஏற்றுக்கொண்டனர். அந்தச் செல்வாக்கு சரிந்துவருகின்றது. பதவி விலகுங்கள்." எனவும் வாசு இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

"ஆம், நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை விடுத்துவிட்டு பதவி விலகவே நானும் திட்டமிட்டுள்ளேன்." என மஹிந்த பதிலளித்துள்ளார். இந்த விடயம் எப்படியோ ஜனாதிபதிக்கு தெரிய வர, உடனடியாக பிரதமரை தொடர்புகொண்டுள்ளார். முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். இதனையடுத்தே பிரதமர் பதவி விலகும் தனது முடிவை மாற்றிக் கொண்டாராம்.


# உள்ளதும் போச்சே!

அமைச்சுப் பதவிகள் கிடைக்காததால் ஆளுங்கட்சியில் உள்ள மூத்த உறுப்பினர்கள் சிலர் கடும் அதிருப்தியில் உள்ளனராம். பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்து இது தொடர்பில் தமது உள்ளக் குமுறல்களை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

"அமைச்சுப் பதவிகளைத் துறப்பதற்கு தாம் தயாராக இருக்கவில்லை. எனினும், ஜனாதிபதியின் பேச்சுக்கு மதிப்பளித்தே அதனை செய்தோம். புதிய அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என நம்பினோம். அவ்வாறு நடக்கவில்லை "எனவும் அவர்கள் பிரதமரிடம் முறையிட்டுள்ளனர்.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை தீரும் வரை சற்றுப் பொறுமை காக்குமாறு பிரதமர், மேற்படி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளாராம். அதேவேளை, ஆளுங்கட்சியில் உள்ள சில உறுப்பினர்கள் தற்போது 11 கட்சிகளின் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திவருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# தேர்தல் வேண்டாம்



தற்போதைய சூழ்நிலையில் எந்தவொரு தேர்தலுக்கும் சென்று விடவேண்டாம் என ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆளுங்கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றை முன்வைத்து,

நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு செல்வது பற்றியும் ஜனாதிபதி பரீசிலித்து வந்தாராம். இப்படிப்பட்ட நிலையிலேயே மேற்படி கோரிக்கையை ஆளும் கட்சிக்காரர்கள் விடுத்துள்ளார்களாம்.

" பொதுத்தேர்தலை நடத்தினால், 77 இல் சுதந்திரக்கட்சிக்கும், 2021 இல் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஏற்பட்ட நிலைமையே நமக்கும் ஏற்படும்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில்கூட ஒரு ஆசனம் கிடைப்பது சந்தேகமே. எனவே, அரசைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, சவால்களைச் சமாளிப்போம்." எனவும் சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனராம்.

## அறிந்தும் அறியாமலும்





சுழியன்

# வளைத்துப்போடுதல்

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஏப்ரல் 21 ஆம் திகதி நடைபெற்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் இதன்போது விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொண்டு, பிரதமர் தலைமையில் ஆட்சியை முன்னெடுப்பதற்கான தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது ஆளுங்கட்சி பக்கம் உள்ள 13 பேர், அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொள்வார்கள் எனவும், இதனால் நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிக்கான ஆசனங்களின் எண்ணிக்கை 103வரை 'குறையக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், அந்த 13 பேரில் 9 பேர்வரை பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு வந்து, அவருக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனராம். பவித்ரா மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஊடாகவே இவர்களை வளைத்துப்போடும் நடவடிக்கையை பஸில் வெற்றிகரமாக முடித்துள்ளார். அதாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தால்கூட அதனை தோற்கடிப்போம் என்ற செய்தியையே மேற்படி தீர்மானம் ஊடாக, ஆளுங்கட்சி, எதிரணிக்கு வழங்கியுள்ளது.

# பதவியும் ஆதரவும்



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை மீளப்பெறுவதற்கு நான்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஹரிஸ், பைஸால் காசிம், எம்.எஸ்.தௌபீக் மற்றும் இஷாக் ரஹுமான் ஆகிய நால்வருமே மொட்டு அரசுடனான 'அரசியல் உறவை' இவ்வாறு முறித்துக் கொண்டுள்ளனர்.

ரவூப்ஹக்கீம்தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத்பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து, அரசுக்கு நேசக்கரம் நீட்டினர்.

இவர்களில் ஹாபிஸ் நஸீர் அஹமட்டுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. எஸ். எம். எம். முஷாரப்புக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவை மீள்பெற்றுக் கொள்வதற்கான அரசியல் பேரம் பேசுதலும் இடம்பெற்றுவருகிறதாம் அதேபோல இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் ஆளுங்கட்சி வலை விரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org